

# சிவதொண்டன்

மலர்-26 | "எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவா னீசன்" | இதழ்-11

## "பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்"

வடிவேறு திரிசூலந் தோன்றுந் தோன்றும்
வளர்சடைமேல் இளமதியந் தோன்றுந் தோன்றும்
கடியேறு கமழ்கொன்றைக் கண்ணி தோன்றுங்
காதில்வெண் குழைதோடு கலந்து தோன்றும்
இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும்
எழில்திகழுந் திருமுடியு மிலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே.

— திருநாவுக்கரசு சுவாமிகள்

உ

# விசேட யாகம்

4-11-62 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் வழக்கம்போல சிவதொண்டன் நிலையத்தில் யாகம் நடைபெறும் என்பதை ஞாபகப் படுத்துகின்றோம்.

**1-11-62**

**சிவதொண்டன் நிலைய கால்கோள் தின விழா** அன்று பிற்பகல் 5 மணிக்கு ஆரம்பமாகும் என்பதையும் தெரிவிக்கின்றோம்.

## சித்தாந்தத் திருமுறை வகுப்புகள்

சனிக்கிழமைதோறும் காலையில் 9 மணி தொடக்கம் $10\frac{1}{2}$ மணி வரையும் ஞாயிறு தோறும் மாலையில் 4 மணி தொடக்கம் 5 மணி வரையும் தேவார வகுப்பும்,

சனிக்கிழமை மாலையிலும் புதன்கிழமை மாலையிலும் 5 மணி தொடக்கம் 7 மணி வரையும், ஞாயிற்றுக்கிழமைகளில் காலையில் 10 மணி தொடக்கம் 12 மணி வரையும் ''சிவஞானசித்தியார்'' வகுப்பும் நடைபெறுகின்றன. ஞாயிற்றுக் கிழமை காலையில் நடைபெறும் வகுப்பில் ஆங்கிலத்திலும் பாடம் நடைபெறும்.

இங்ஙனம்
**சிவதொண்டன் சபையார்.**

# சிவதொண்டன்

— செந்தமிழ் ஆங்கிலத் திங்கள் வெளியீடு —
"எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவா னீசன்"

மலர் - 26. சுபகிருது ஞூ ஐப்பசி மீ (ஒக்டோபர் — நவம்பர் 1962) இதழ் - 11

## நற்சிந்தனை

(சிவபக்தி)

சிவபக்தி மாத்திரந்தான் மனிதனைப் பாக்கியவானுக்கும். மற்றைய வனைத்தும் பிரயோசனமற்றவை. ஆகையால் இடைவிடாமற் சிவத்தியானம் பண்ணு. ஒன்றுக்கும் பயப்படாதே. வெற்றியுன் சொந்தம். எத்தனை முறை தவறினாலும் தைரியத்தைக் கைவிடாதே. தவறுதல் சடசம்பந்தமானது. நீயோ சித்துப்பொருள் (அதாவது அறிவுப் பொருள்). நீயொரு நாளும் அழியமாட்டாய். எழுந்திரு! விழித்துக் கொள்! காரியங் கைகூடு மட்டும் வழியிலே தங்கிவிடாதே! உற்சாகத்தோடு முன்னேறிச் செல். உனக்குச் சகல சத்தியுங் கட்டுப்படுவதைக் காண். வீண்வாத தர்க்கத்திலே நாளைப் போக்காதே. நீ எங்கே போகிறாயோ அங்கே உன்னுடன் பகவான் வருவார்.

வெளிமாதிரி யொன்றுஞ் செய்யாதே. உனக்குள் நீ பெலத்துக் கொள். சமயமென்பது ஒரு மாதிரியு மற்ற தனித்த நிலை. உடல்பொருள் ஆவி மூன்றையும் பகவானுக்கு ஒப்படை. அதன்பின் உன்னைப் பற்றிய காரியங்களைக் கைவிட்டு விடு. அனைத்தும் அவனே பார்.

# தாயுமான சுவாமிகள்

காலத்துக்குக் காலம் ஒவ்வொரு பெருந்தகையார் தோன்றி உலகிற்குப் பெருநன்மை விளைத்திருக்கின்றனர். ஆசிரியர் திருவள்ளுவனுர் உலகுள்ளவரை நிலவும் பொதுமறை யளித்தனர். மணிவாசகப்பெருமான் சிவனது அறிவு நெறியை நிலைநாட்டினர். சம்பந்தரும், அப்பரும் சமணரை வென்று அன்பு நெறியைப் பாதுகாத்தனர். திருநாவலூரர் யோகமும் வீடும் நல்கும் இறைவன் பேரருளை விளக்கித் தமிழ் நாட்டுத் தொண்டர் தொகுதி செப்பினர். திருமூலமாமுனிவர் மந்திரயோக மாண்பு விளக்கினர். நம்பியாண்டார் நம்பிகள் திருமுறையை வெளியாக்கினர். ஆசிரியர் சேக்கிழார் இணையற்ற திருத்தொண்டர் புராண மீந்தனர். கம்பநாட்டடிகள் தமிழ் நலம் செறிந்த பொதுப்பெருங் காப்பியமியற்றினர். குமரகுருபரர் இமயத்திற் சைவக்கொடி நாட்டினர்.

இவ்வாறே உலகம் யாவும் போற்றும் ஒரு முதல்வனின் விரிந்த பொதுத் தன்மைகளை இன்சுவை ததும்பும் அமுதப்பாடல்கள் வாயிலாக அறிவுறுத்திய பாவலரும், உயர்ந்த பேரின்ப நிலை யொன்றினையே விழைந்து செல்லும் உயிரினியல்பைத் தன்னிலை கூறுமுகத்தாற் பன்னிய பெரியாரும், மனமாயையினுட்ப முரைத்த மூதறிவாளரும், தாயுமான அடிகளென்னுஞ் சிவானுபூதிப் பெருஞ் செல்வரே ஆவர். அவர் எவ்வுயிரையும் தன்னுயிர்போலெண்ணியிரங்கும் அருளொழுக்கத்தை உலகினர்க்குரைப்பதில் ஒப்பற்ற ஆர்வமுடையவர். தாழ்வென்னுந் தன்மையிற் றலை சான்றவர். உலகினர் யாவரும் மெய்ந்நெறி கடைப்பிடித்து அகண்டாகார சிவத்தைத் துய்க்கும் வண்ணம் கூவுங் கருணை முகிலனைய அப்பேரறிவாளரது வாழ்க்கை வரலாறு சுருக்கமாக ஈண்டு ஆராயப் படும்.

சோழ நாட்டிலே தேவாரத் திருமறையின் பெருமையை இனிது விளக்கிய திருமறைக் காட்டிலே ஏறக்குறைய முற்நூற்றைம்பது ஆண்டுகட்கு முன் கேடிலியப்பபிள்ளை யென்பவர் சைவ வேளாளகுல முதல்வராய்த் திகழ்ந்தனர். அவர் கல்வியறிவும் ஒழுக்கமும் வினையாள் திறனும் ஒருங்கு வாய்ந்தவராதலின், அவ்வூர் இறைவர் திருத்தளிக்கு அவரை அறத் தலைவராகச் சைவ ஆதீனத்தார் ஏற்படுத்தினர்; தமது தமையனுர் மகப்பேறின்றி வருந்தினமையால் அவருக்குத் தமது புதல்வராய சிவசிதம்பரப் பிள்ளையைத் தெத்தாகக் கொடுத்து விட்டுத் தமக்கு ஒருபிள்ளை அருளும்படி இறைவனை வேண்டினர். இக்காலத்தில் திரிசிராப்பள்ளியிலிருந்து அரசுசெலுத்திய முத்துக்கிருட்டின நாயக்கர் அவையிலே கேடிலியப்ப பிள்ளை பெருங்கணக்கரென்னும் உயர் பதவியிலிருந்தனர். அதனுல் தமது வசிப்பிடத்தைத் திரிசிராப்பள்ளிக்கே

மாற்றியிருந்தார். அவ்வூரிற் றிருக் கோயிலில் வீற்றிருக்கும் தாயுமானப் பெருமான்பாற் பிள்ளைவரம் வேண்டினர். அவ்வண்ணல் திருவருளால் உலகிற்கெல்லாம் திருவருட் பெருமையை விளக்க அருந்தவ ஆண் குழந்தை பிறந்தது. அதற்குத் தாயுமானவர் என்ற திருப்பெயரிட்டனர்.

தாயுமானவர் உரிய காலத்திலே கல்விகற்கத் தொடங்கி வடநூற் கடலும் தென்னூற் கடலும் நிலைகண்டுணர்ந்தனர். பாடற்றிறமையும் பண்பொடுபழகிப் பண்ணிசைந்த மூவர் பாடலின் இணையற்ற தீஞ் சுவையையும், மணிமொழியாரின் திருவாசகக் கனிவையும் நுகர்ந்தனர். திருவருட் பெற்றியோர்ந்து அதனை எப்போதும் பாடியுந் தேடியும் பயன் பெறும் பேரவாவுற்றனர். அது,

"சந்ததமும் நின்கருணை சாற்றுவதல் லால்வேறு
சிந்தை யறியேனுன் சித்தம் பராபரமே"
— பராபரம் 8.

"மண்ணொடு விண்காட்டி மறைந்து மறை
யாவருளைக்
கண்ணொடு கண்ணக வென்று காண்பேன்"

என்றமையாற் றெளிக.

அந்நாளிலே அவர் தகப்பனர் விண்ணெய்தியமையால், அரசன் அவரை வரவழைத்து, அவராற்றலைப் பரிசோதனையாலறிந்து மிகவியந்து தந்தை பதவியை மைந்தருக்கு நல்கினன். மைந்தரும் அரசாங்கக் கடமையைச் செவ்விதினியற்றி வருங்காலை, உலக நிலையாமை யுணர்ந்து சிவநுகர்ச்சிப் பேரின்பப் பேற்றினையே பெரிதும் விழைந்து அது எஞ்ஞான்று தமக்குக் கிட்டுமோவென்று கவலையுறு வாராயினர்.

"இறப்பொடு பிறப்பை யுள்ளே யெண்ணினுல்
நெஞ்சது பகீரெனும் துயிலுருது
இருவிழியு மிரவு பகலாய்ச் செந்தழலின்
மெழுகான தங்கமிவை யென்கொலோ"
—சின்மயானந்தகுரு 5.

"பாவி படுங் கட்கலக்கம் பார்த்திலாயோ"
—கல்லாலின் 15.

"கண்டிலையோ நான்படும் பாடு" ஷ 22

"மோகமாதி தருபாச மானதை
யறிந்துவிட்டுனையு மெனையுமே
"முழுது ணர்ந்து பர மான இன்பவெளம்
மூழ்க வேண்டுமிது வன்றியே
தேகமே நழுவி நானுமோ நழுவிற்
பின்னை யுய்யும் வகையுள்ளதோ"
—சிற்சுகோதயம் 5.

என்பவற்ருற் காண்க.

பேரின்ப நாட்ட மிகுதிப்பாட்டால் அடிகள் பித்துக்கொண்டவர் போலானுர் என்பது,

"சுத்த வறிவாய்ச் சுகம்பொருந்தி னல்லால் என்
சித்தந் தெளியாதென் செய்வேன் பராபரமே"
—பராபரம் 22.

"மாரு அனுபூதி வாய்க்கின் அல்லால் என் மயக்கந்
தேருது என் செய்வேன்"
—பராபரம் 23.

"பாரரயோ வென்னைமுகம் பார்த்தொருகா
லென்கவலை
தீராயோ வாய்திறந்து செப்பாய் பராபரமே"
—பராபரம் 28.

என்பவற்ரு லறியப்படும்.

அடிகளது தாழ்வெனும் தன்மை,

"என்போ லெளியவரு மெங்கெங்கும் பார்த்தாலும்
உன்போல் வலியவரு முண்டோ பராபரமே"
—பராபரம் 116.

என்னுந் திருப்பாட்டாற் புலனுகும்.

அருட்பெருந் தகையராகிய அடிகள் இளமையிலேயே இறைவன் தம்மைப் பித்துக்கொள்ளும்படி செய்தனரென் பார்,

"அன்பின் வழியறியாத என்னைத்தொடர்ந்து
என்னையறியாத பக்குவத்தே
ஆசைப் பெருக்கைப் பெருக்கிக் கொடுத்துநான்
அற்றேன் அலந்தேன் என
என்புல மயங்கவே பித்தேற்றி விட்டாய்"

என்றார்.

அருட்குருவை நாடி அடிகள் அலைந் தமை,

"தேடினேன் திக்கனைத்துந் தெண்டனிட்டேன்
சிந்தை நைந்து
வாடினேன் என்மயக்க மாற்றாய் பராபரமே

—பராபரம் 200.

என்பதால் தெளிக.

பெருநிலை எய்துதற்குத் தமக்குத் தகுதியில்லை; திருவருளுமிரங்கவில்லை யென்று பல விடங்களில் அடிகள் குறிக்கின்றார்.

"எத்தனை விதங்கள்தான் கற்கினும் கேட்கினு
மென் இதயமும் ஒடுங்கவில்லை
யான் எனு மகந்தைதான் எள்ளளவும் மாறவில்லை'

—ஆனந்தமான பரம் 9.

எப்பொருளின் கண்ணுமுள்ள பற் றானது என் சித்தத்தில் குடிகொண் டிருக்கிறது. ஈகையும் இரக்கமும் யான் அறிகிலேன். சீலமும் தவமும் விரதமும் கனவிலுங் கடைப்பிடி யேன். பொய்ம்மொழியல்லால், மருந் துக்கும் மெய்ம்மொழி பேசேன். பிறர்க்கு நன்மதி புகட்டுவதல்லாமல், நான் சும்மா இருந்து அருள் பொருந் திடேன். இத்தனை குணக்கேடு உடை யவர்களை இவ்வுலகிற்கண்டதுண்டோ? கேட்டதுண்டோ, சொல்லுக என்றது காண்க.

பாட்டுப்பாடி நின்னை வாழ்த்த வேண்டும். பக்தி எனக்கில்லை. மறை மொழியாதல், மூவர் தீந்தமிழாதல் ஓது வதற்கு இசையுணர்ச்சியில்லை. யோக நெறி பயில்வதற்கு உடம்பு இடங் கொடுக்கவில்லை. உணவினை வெறுப் பது உயிரை வெறுப்பதுபோல் இருக் கின்றது.

—சச்சிதானந்தசிவம் 3.

வேறு எளிதான நற்செயல் செய்ய லாகாதோவெனின் மனமயல் சிறி தும் நீங்கவில்லை. ஞானநெறியாகிய மோனத்தில் நிற்பதற்கோ பரிபாகம் முற்றவில்லை.

"தமியனேற்கு அருள்தாகமோ சற்றுமில்லை"

—எங்குநிறை 6.

"ஆணிலே பெண்ணிலே யென்போல
ஒருபேதை அகிலத்தின் மிசையுள்ளதோ"

—சித்தர்கணம் 7.

"ஆனாலும் என்கொடுமை அநியாயம் அநியாயம்
ஆர்பா லெடுத்து மொழிவேன்"

—ஆனந்தமானபரம் 7.

என்னுங் கருத்துக்களால், தம்மை அடிகள் இகழ்தலாலும்,

"பதினாயிரஞ் சொன்னாலு நின்னருள்
இரங்கவில்லையே இனிச்சுகம் வருவதெப்படி"

—சுகவாரி 12.

என்று கூறுதலாலும் அறிக.

இனித் திருவருளை உரிமையுடன் வேண்டுவார்,

"நாடகம் நடித்ததோ குறைவில்லை அகிலமும்
சிறித றியுமேல்
தண்ணாரும் நின்னதரு ளறியாத தல்லவே"

—எங்குநிறை 5.

"ஒருமை மனதாகிய அல்லல்அற நின்னருளில்
ஒருவன் நான் வந்திருக்கின்
உலகம் பொருததோ?"

—எங்குநிறை 7.

"அன்பர் எல்லாம் இன்பம் அருந்திடவும் யான் ஒருவன் துன்புறுதல் நன்றோ"
—பராபரம் 254.

என்றித்தகைய பல இயம்பியருளினர்.

எங்கும் நிறைந்துள்ள பரம்பொருளின் வடிவமாகவே எப்பொருளையும் காணவல்ல அடிகள் காற்றினையும் கடலினையும் பிறவற்றையும் நோக்கி, அவற்றின்கண் கலந்துள்ள முதல்வனை எத்தகையன் என்று அடிகள் வினவுவது உள்ளத்தை உருக்கும் பான்மையது.

'வியந்தாங் கலறித் தேடிற்றிலேன்', 'சிவன் எவ்விடத்தான்? எவர் கண்டனர் என்று ஓடிற்றிலேன்' என்ற மணிவாசகத்திற்கு அடிகள் சிறந்த இலக்காயினர். அடிகள் அருள்மொழிகளின் கருத்து வருமாறு:-

வானத்திலே மதியையும் கதிரோனையும் நோக்கி, நேரே இரவுபகல் கோடாவண்ணம் நித்தம்வர உங்களை இந்நிலையில் வைத்தார் யாரோ? அவர் பெருமை இருந்தவாறென்னே? என்பேன். வீசுகின்ற காற்றே நீ யாராலே உன்போக்குத் தவறாது சுழல்கின்றாய் என்பேன். மழை பொழிகின்ற முகில்களே! உங்களைப்போல எம்பெருமான் தாராளமாகக் கருணை பொழியச் செய்தற்கு உபாயம் யாதோ? சொல்லுவீர் என்பேன். கருத்திலடங்காத வானே! நீ எங்கும் கலந்துள்ளாயே, உனக்கப்பாற் புக்குப் பார்க்குங்கால் ஆங்குள்ள பரம்பொருள் எப்படியிருக்கும்? சொல்லாயோ என்பேன்; மண்ணே! நீ ஒடுங்கியவிடத்து எப்பொருள் விளங்கி நிற்கும்? உன்னைச் சுமக்கும் நல்லறிவுடைய ஆதிசேடன் முடிந்த உண்மை சொல்வானோ என்பேன். அருள் நூல்களே! எல்லார்க்குந் தெளிவாக உங்கள் முடிவினை உரைக்க வென்பேன். சொல்லிற் கடங்காப் பெருமையுடன். அலையாய கைகளை அசைத்து ஒலிக்கின்ற கடலே! இவ்வுலகத்தைச் சூழ்ந்து கரையின்றி நிற்கும்படி உன்னை வைத்தவர் யார் என்பேன். காட்டுப் பசுங்கிளியே! கமலங்கடோறும் சென்றாதும் வண்டினங்களே! அன்னங்களே! தூதுபோந்தன்மை யுடைய நீங்கள் இதுவரை பெரிய பரிபூரணமாம் பொருளைக்கண்டு பேசியதுண்டோ? உண்டெனின் என்பொருட்டு ஒருமுறை அவர்பாற் சென்று பேசுமின், என்பேன்.

—ஆகாரபுவனம் 25, 26, 27.

இங்ஙனம் அருட்குரவன் வரவை உள்நாடி அடிகள் அரசாங்க வேலை பார்த்துத் திரிசிரபுரத்தே வதியுங் காலத்தே தருமபுர ஆதீனத்தில் உபதேசம் பெற்ற மௌன குரு தேசிகரென்னுஞ் சிவயோகியார் சிதம்பரத்தினின்று புறப்பட்டு, பல கோயில்களையும் வணங்கிக்கொண்டு திரிசிராப் பள்ளியிலே சாரமாமுனிவர் மடம் என்ற இடத்திலே சின்னாட்டங்கி இருந்தார். அவர் அவண் பலமாணவர்க்கு மெய்க் நூலறிவுறுத்தினமையால், அவ்விடத்திற்கு மௌனகுரு மடமென்ற பெயர் வழங்கலாயிற்று.

மௌனகுரு அங்கிருக்கு நாளிலே ஒருநாள் அடிகள் தமது வழக்கப்படி சிராமலைநாதரைக் கும்பிட்டபின், சாரமாமுனிவர் மடத்தருகேயுள்ள குமாரக்கடவுளை வணங்கி மீளும் போது மௌன தேசிகரைக் கண்ட

னர். கண்டவுடன் உள்ளங்கவரப் பெற்றுத் தேசிகர் திருவடிகளில் வீழ்ந்திறைஞ்சினர். அடிகளது உயர்ந்த பக்குவ நிலையை அறிந்த மௌனகுரு அவருக்கு யோகஞான முறைகளை அருளினர். குருவானவர் தமது கையிலே சிவஞானசித்தியார் வைத்திருந்தனரெனவும், அதன் எட்டாஞ் சூத்திரம் முப்பதாம் பாட்டின் முதற் பாதியையோதி அடிகட்கு மெய்ந்நூற் பொருளை அறிவுறுத்தினரெனவுங் கூறுப. அடிகள் அன்று முதல் சித்தாந்த நூல்களைக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல் என்னும் நான்கினையும் மேற்கொண்டு கல்லாலடிக்கீழ் வைகும் முதல்வன் திருமுன்பு ஒன்று படுதலாகிய நிட்டைப் பயிற்சி செய்து வந்தனர். அக்காலத்திலேயே திருவருள் விலாசப் பரசிவ வணக்கமும், பொருள் வணக்கமும், பரிபூரணானந்தமும் பாடினர். "சின்மயானந்த குரு" என்பது கல்லால நீழற் கடவுள்மீது பாடப்பட்டது. தமது ஆசிரியர் பெருமையை "மௌனகுரு" என்னுந் திருப்பதிகத்திலே வியந்தனர். இப் பாடல்களையெல்லாம் அடிகளது சிறிய தாயார் புதல்வரான அருளையபிள்ளை என்பவர் எழுதிப் பாதுகாத்துப் பிறருக்கு முரைத்தனர்.

தாயுமானவர்பாற் பல திருவருட் புதுமைகள் கண்ட மன்னன் அச்சமுற்று ஒருநாள் அவரை வணங்கி, இதுவரை தங்கள் பெருமையை உணர்ந்திலேன்; அடியேனால் வேண்டுவனவற்றைச் செய்வித்துக் கொண்டு தங்கள் நிட்டை நிலைக்கு இடையூறின்றி யினிது வைகியருள்க என்றனன். அடிகளும் அவ்வாறே ஞான நெறியில் ஒழுகி வந்தனர். திருவானைக் காவகிலாண்ட நாயகி பதிகம் இக்காலத்திலே அடிகளாற் பாடப்பட்ட தென்ப. திரிசிரபுர அரசன் 1625ல் உலகு நீத்தனனாக அரசு அரசியின் ஆட்சியிலிருந்தது. அரசன் மனைவி தாயுமானசுவாமிகளை அழைத்துப் பெரிய கணக்கு வேலையைப் பார்க்க வேண்டுமென்று குறையிரந்தனள். அடிகள் ஒருவாறு இணக்கமுற்றனர். பின்னர் அரசியானவள் அவரது கட்டழகினாற் பிணிப்புற்றுத் தகாத செய்கையைக் கருதித் தெரிவிக்க, தெரிவித்த அந்நாளிரவே அடிகள் அருளையரோடு திரிசிரபுரம் நீத்துத் தென்றிசை நோக்கிச் சென்றனர். வழியிலே நல்லூர் என்னுஞ் சிற்றூரினை யடைந்தபோது, தமது சிவபூசைப் பெட்டியை எடுத்துவரத் தவறினமையை யுணர்ந்து அருளையரை அதனை எடுத்துவருமாறு அனுப்பிவிட்டு, அடிகள் அவண் அயர்வுற்றிருந்தகாலை, அவ்வூரினர் அவரைப் பாலுணவு கொள்ள வேண்டினர். அப்போது தாம் பாடிக்கொண்டிருந்த "கருணாகரக்கடவுள்" என்னும் பதிகத்திலே ஐந்துபாடல் முடிந்திருப்ப, ஆறுவது பாட்டாகப் "பண்ணேனுனக்கான பூசை" யென்பதைப் பாடியருளித் தமது பசியை ஒரு சிறிது தீர்த்துக் கொண்டாரென்ப.

திரிசிராப்பள்ளியில் அடிகளைக் காணாமையால் அரசி மிகவுஞ் சினந்து மந்திரத்தொழில் வல்லானொருவனை அவரைத் தேடிக்கண்டு வசியஞ் செய்யுமாறு ஏவினள், அவன் நல்லூரை யடைந்து, நிட்டையிலிருந்த அடிகட்குப் பின்னிருந்து வசியமறை செப்பியகாலை, அடிகள் திரும்பி யவனைப்

பார்த்தவுடன், மனநிலை கலங்கி, அவரடியில் வீழ்ந்துவணங்கி, மன்னிப்புக் கேட்டுக்கொண்டு மீண்டு போயினன். பின்னர் அடிகள் இராமேசுரஞ் செல்வான் அருளையரோடு புறப்பட்டார்.

இருவரும் வழியில் விராலிமலையை யடைந்தனர். அங்கே வசித்த ஒரு சைவவேளாள வள்ளலுக்குக் கனவிலே ஒரு துறவி தோன்றி "என் பிள்ளைகளிருவர் பட்டினியாலிவண் வந்திருக்கிறார்கள்; அவர்களுக்கு அன்னம் அளிக்க" என்றேவிய அளவில் அவன் இவர்களிருவரையுமறிந்து உணவு நல்கினன். அதன் சிறந்த பயனாக அவனுக்கு ஒரு மைந்தன் பிறந்தமையால் அம்மகவிற்குத் தாயுமானவர் என்ற பெயரிட்டனர். அவ்வேளாள குடும்பத்தார் தங்கள் பெயர்க்குமுன் "தாயுமான" என்ற அடைமொழியை இன்னும் வழங்கி வருகின்றார்கள்.

விராலி மலையில் அடிகள் தங்கிய காலத்தே, ஒரு சித்தர் அடிகளின் உயர்ந்த மனநிலையையறிந்து அவரைச் சித்தர் பலரிருக்கு மோரிடத்துக்கு அழைத்துச் சென்றார். அன்னாரோடு அடிகள் சின்னாட்கள் அளவளாவியிருந்தனர். அக்காலத்தில் 'சித்தர்கணம்' என்பது பாடப்பட்டது போலும். உடற் சித்தியும் உயிர் முத்தியும் ஒருங்கே எய்தவேண்டு மென்ற கருத்து அடிகட்கு அப்போது உதித்திருத்தல் கூடும். ஆனந்தமானபரம் முதலிய திருப்பாடல்களும் விராலிமலையில் பாடப்பெற்றன. அங்கிருந்து புறப்பட்டுப் புதுக்கோட்டைக்கு அருகிலுள்ள "கபிலை" என்னும் பெயருடன் விளங்கும் திருப்பதியை யடைந்து அங்கு வீற்றிருக்கும் பெரிய நாயகியார்மீது "காற்றைப் பிடித்து" என்ற பாடலருளிச் செய்தார்.

பின் இராமேசுரஞ் சென்றார். அங்கே பாடிய பாடல் 'மலைவளர் காதலி' என்பது. இத்திருப்பதிகத்தே செல்வர்க்குங் குற்றேவல் செய்யும் வாழ்க்கையை வெறுத்துக் கூறிய பகுதி வருமாறு:-

"மிடியிட்ட வாழ்க்கையா லுப்பிட்ட கலமெனவு
மெய்யெலா முள்ளுடைந்து
வீறிட்ட செல்வர்தந் தலைவாயில் வாசமாய்
வேதனைகள் உற வேதனும்
துடியிட்ட வெவ்வினையை யேவினுன் பாவிதான்
தொடரிட்ட தொழில்க ளெல்லாம்
துண்டிட்ட சாண்கும்பி யின்பொருட் டாயதுன்
தொண்டர்பணி செய்வ தென்றோ"

—மலைவளர்காதலி 4.

சிலகாலம் அங்கு தங்கிய பின்னர் அடிகளும் தம்பியாரும் வடதிசை நோக்கிப் போயபோது தம்மைத் தேடிவரும் தமையனாருடைய ஆட்களைச் சந்தித்தினர். தமையனார் கருத்திற்கிணங்க இருவரும் திரிசிராப்பள்ளி சென்று வீட்டுப் பொருட்களை எடுப்பித்துக்கொண்டு தாயாரையும் அழைத்துப் போய்த் திருமறைக் காடடைந்தனர். அடிகள் அங்கு வைகும்போது அவரது தமையனாரும் தாயாரும் அவருக்குத் திருமணம் நிகழ்த்த வேண்டு மென்று வற்புறுத்தினர். பலவாறு மறுத்தும் அவர்கள் உடன்படாமையால் அடிகள் திருமணத்திற் கிசைந்தனர். தாம் மௌன குருவின்பால் அறிவுரை பெற்ற பின்னும் இல்லறத்தி லிறைவன் தம்மைச் செலுத்தியது, தமக்கு வெறுப்பும் விருப்பும் ஈவ தென்பார்,

"பாரு பாரென நடத்த வந்ததென்
பாரதத்திலு முள்ளதோ?
சித்த மிப்படி மயங்கு மோ?
அருளை நம்பினோர்கள் பெறுபேறிதோ"

—சிற்சுகோதயம் 9.

என்றார்.

திருமணம் நிகழ்ந்து ஒரு பிள்ளை பிறந்தபின் மனைவி சிவபதம் உற்றாள். பிள்ளைக்குக் கனகசபாபதி என்ற பெயரிடப்பட்டது. இல்லறத்தில் வீற்றிருந்த காலத்தில் அடிகள் கண்ணிகள் பலவும் பாடினரென்ப. தமது தாயார் காலஞ்சென்ற பின்னர் தமது செல்வத்தையும் செல்வக் குமாரனையும் தமையனாரிடம் ஒப்புவித்துத் தாம் கடுந்துறவுபூண்டு கோவணவாடையொடு அடிகள் புறம்போந்தனர். அருளையபிள்ளையும் பின் தொடர்ந்தனர். அடிகள் இறைவன் தமக்குச் செய்தநன்றியை அழகாக ஒரு செய்யுளில் விதக்கின்றார். அதன் கருத்து:-

"அலைகடல் போன்ற பெருஞ் செல்வம் அல்லல் விளைக்குமாதலின் அதனை நல்காது ஒருவர்பின் சென்று வருந்தாமலும் கேட்பார்க்கில்லையென்னுமலும் பகுத்துண்டு பல்லுயிரோம்புதற்கு வேண்டுஞ்செல்வமுதவி நோயற்ற சுகவாழ்க்கை யளித்து யோக ஞானநெறி நிற்கும் நிலையும் உண்ணின்றுணர்த்தியதோடு மோனகுருவாக நிலமிசைத்தோன்றி யருள் புரிந்த உன்சிறந்த கருணையை, ஐய! என்னென்று சொல்லுவேன். இவன் சிறியன்; அறிவிலியாயினும் நமது அடிமையென்ற கருத்து நின்திருவுள்ளத்திலிருந்தது போலும்" என்றனர்.

திருவருள் தமக்குப் பல நலங்கள் தந்தது போலவே இடைவிடா மோன நிட்டையும் நல்கவேண்டுமென்பார், "வருவன வருக வாராதன போக" வென்று பற்றுவிடுத்து மனச் சான்றிற்கு மாறின்றி யொழுகும் நிலை தந்ததும், வேதாந்த சித்தாந்த உண்மைக் கருத்தொருமையை முற்றிலுமுணர அறிவு உதவியதும், உடல் நிலையாமை யுணர்ந்து ஞானநெறி நிற்றலை யளித்ததும் என்றும் நிலைத்த பேரின்ப நுகர்ச்சியே வீடென்று தெளிந்து புனல்போல உள்ளம் உருக அன்புதந்ததும் நின்னுடைய அருளே. இன்னும் நின்னையே துணையென்ற என்னையே காக்க ஒரு எண்ணம் உனக்கு உண்டெனின், உலக முதலிய அசத்துத் தோன்றாது சிவசத்தே தோன்றும் மோன நிலையே பற்றாக நிற்க அருள்வாய்" என்றனர்.

—பரிபூரணானந்தம் 8.

அடிகள் இறைவனுக்கே தம்மைக் கொடுத்துவிட்டாராதலின் "தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னை" என்று மணிவாசகனார் கூறிய படியே

"தன்னைத்தந் தென்னைத் தடுத்தாண்ட நின்கருணைக்கு
என்னைக்கொண் டென்னபலன் எந்தாய்"

—பராபரம் 127.

என்றும்,

"சிந்தை மயக்கமறச் சின்மயமாய் நின்ற உன்னைத்
தந்தவுனக் கென்னையுநான் தந்தேன்"

—பராபரம் 329.

என்று மருளிச் செய்தனர்.

"தன்ன தென்றுரை சாற்று வனவெலாம்
நின்ன தென்றனை நின்னிடத்தே தந்தேன்"

—பொன்னைமாதரை 2.

என்றது மது.

மெய்யுணர்ந்தும், இடையிடையே தோன்றும் வாசனா மலத்தை அறவே ஒழிக்க விரும்பும் அடிகள்,

"இந்நிலையி லேசற் றிருக்க வென்றால் மடைமை
இதசத்துரு வாக வந்து
சிந்தைகுடி கொள்ளுதே பலமாயை கன்மம்
திரும்புமோ தொடுவழக்காய்ச் சென்மம் வருமோ"

எனவும்,

"............ மனது யோசிக்குதே
சிரத்தை யெனும் வாளும் உதவிப்
பந்தம் அற மெய்ஞ்ஞான தீரமுந் தந்து எனைப்
பாதுகாத் தருள் செய் குவாய்"

என்று இறைவனை வேண்டினரென்க.

"வைத்த தேகம் வருந்த வருந்திடும்
பித்தன் நான் அருள் பெற்றுந் திடமிலேன்"

—பொன்னைமாதரை 10.

என்றதுமது.

அடிகள் முடிந்த மோன நிலையை எய்துமுன் தன்னிலைமையைக் கூறுவான்,

"ஒன்றைப் பெற்றவனு மல்லேன் பெருதவனு
பெருக்கத் தவித்து எறியே [மல்லேன்
பெண்ணீர்மை யென்ன இருகண்ணிர் இறைத்து
பேய்போ லிருக்க உலகஞ் [நான்
சுற்றிநகை செய்யவே உலையவிட் டாயெனிற்.
சொல்லவினி வாயுமுண்டோ"

—சுகவாரி 6.

என்றனர்.

"கருத்தினுட் கருத்தா யிருந்து நீ யுணர்த்துங்
காரணங் கண்டு சும்மாதான்
வருத்த மற்றிருந்து சுகம்பெரு வண்ணம்
வருந்தினேன்"

—ஆரணம் 6.

என்றதுமது.

இறைவன் மெய்யன்பையும் இன்ப நிட்டையையுந் தாராவிடின் உயிர் துறப்பே னென்பார்,

"நீராயுருக உள்ளன்பு தந்தேசுக நிட்டையை நீ
தாராவிடின் என்பெரு மூச்சுத்தானந் தனஞ்சயனே"

—பாயப்புலி 20.

என்றார்.

தனஞ்செயன் என்னும் வாயுவானது உயிர் உடலை நீத்தபின் உடலின்கண் நின்று புறம் போவது. மோனநிட்டையிற் பழகியபின் அடிகள் தன்னிலை யுணர்த்துவார்,

"நடக்கினு மோடினு நிற்கினும் வேறொரு நாட்ட
மின்றிக்
கிடக்கினும் செவ்வி திருக்கினும் நல்லருட்
கேள்வியிலே
தொடக்கும் என்னெஞ்சம் மனமற்ற பூரணத்
தொட்டிக்குள்ளே
முடக்குவன் யான்பர மானந்த நித்திரை
மூடிடுமே"

—பாயப்புலி 12.

என்றார்.

இறைவனது பூரணந் தன்னை விழுங்கியவிடத்து ஒன்றுங் கூறவொண்ணா தென்பார்,

"வாரிக் கொண்டெனை வாய்மடுத் தின்பமாய்ப்
பாரிற் கண்டவை யாவும் பருகினை
ஒரிற் கண்டிடும் ஊமன் கனவென
யாருக் குஞ்சொல வாயிலை ஐயனே"

—பொன்னை மாதரை 30.

என்றார்.

அடிகள் துறவடைந்தபின் திரிசிராப்பள்ளி மௌனகுரு மடத்தை யடைந்து தமது குருமூர்த்தியை வணங்கிச் சிலகாலம் அவண் தங்கினர். தமது குருவிற்குப்பின் கி. பி. 1644ம் ஆண்டு தொடங்கிச் சின்னாள் அவரது திருமடத்துத் தலைவராய்த் திகழ்ந்தனர். அப்பால் தமது இளவலோடு தென்றிசை சென்று இராமநாதபுரத்தின் கீழ்பாற் காட்டூரணி யென்ற தனியிடத்தில் புளியமரமொன்றின் நீழலில் வதிந்தனர். அதுவே தமது நிட்டைக்குத் தகுந்த இடமெனக் கருதினர் போலும். பின்பு அவ்விடத்தில் அடிகட்கு வசதி செய்யக் கருதிய ஓர் அன்னை குளமொன்று தொட்டுப் பூங்காவொன்று வளர்த்து அவ்விடத்தில் அடிகளை வைகும்படி வேண்டினர். அவ்வாறிருந்து அடிகள் பேரானந்த சமாதிநிலையுற்றனர். கி. பி. 1662க்கு ஒத்த சாலிவாகன சகாப்தம் 1584ல் தைமாதம் 28ந் திகதி விசாகத்தன்று மாலை அடிகள் கடவுள் திருவடியிற் கலந்தனர்.

# சண்முக விஜயம்

— மலர் 26, இதழ் 10, பக்கம் 299ன் தொடர்ச்சி.

## 17. முருகக்கடவுள் போருக்கு எழுந்தருளல்

திருச்செந்தூரில் இருந்தருளிய முருகக் கடவுள் வீரவாகு தேவரிடம் "பாவங்களையே செய்கின்ற சூரனையும் அவன் உறவினரையும் அழிக்கவும், தேவர்களைச் சிறை விடுக்கவும், நாம் வீரமகேந்திரபுரத்துக்குச் செல்வோம். ஆயத்தஞ் செய்க" என்றருளிச் செய்தார். உடனே வீரவாகு தேவர் மனவேகம் என்னும் தேரை ஆயத்தப்படுத்தினர். தேவர்கள் எல்லோரும் மனமிக மகிழ்ந்து தத்தம் இயல்புக்கேற்ற முறையில் ஆயத்தமானார்கள்.

பிரமா அன்னத்திலும், திருமால் கருடனிலும், இந்திரன் விமானத்திலும், இலக்கத்தொன்பது வீரரும் தேர்களிலும், மற்றைத் தேவர்கள் தத்தம் வாகனத்திலும் ஆயத்தமானார்கள். சுப்பிரர், மேகமாலி, கபாலி, வச்சிரர், வீமர், உக்கிரர், தண்டர், பத்திரர் முதலாய நூற்றெட்டுப் படைத்தலைவர்களும் முருகக்கடவுளைச் சூழ்ந்தார்கள்.

இரண்டாயிரம் வெள்ளம் பூதசேனைகள் ஆரவாரித்தெழுந்தனர். பேரிகை, கரடிகை, துடி, காளம் முதலிய வாத்தியங்கள் ஒலித்தன. தேவர்கள் பூமழை சொரிந்தனர். முருகக் கடவுள் சேனைகள் புடை சூழத் திருச்செந்தூரை விட்டு ஆகாய வழியாகச் சென்று இலங்கையைக் கடந்து வீரமகேந்திரபுரத்தில் எழுந்தருளினர்.

அங்கே தேவதச்சனைக்கொண்டு பெரிய பாசறையை அமைப்பித்து அதற்கு ஏமகூடம் என்று பெயரிட்டு அதில் தங்கி இருந்தார்கள்.

முருகக் கடவுள் பாசறையில் தங்கி இருந்த செய்தியை நாரதமுனிவர் மூலம் அறிந்த சூரன் சீறிச்சினந்து "நன்று நன்று சிங்கக் கூட்டங்கள் உள்ள காட்டில் யானைக்கன்று ஒன்று, மான்கன்றுகளோடு புகுந்தாற்போலச் சிவகுமாரன் வந்தான். எனக்கு அஞ்சி வாழ்ந்த திருமால், பிரமா, இந்திரன் ஆதிய தேவர்கள், சாம்பலைப் பூசுகின்ற சிவனுடைய குமாரனோடு வந்தார்கள். சிவகுமாரனை எதிர்த்து வெற்றிகொள்ள என் குமாரனை அனுப்புவேன்" என்றான். இதற்குள் ஒற்றர்கள் அங்கேவந்து முருகக்கடவுள் வீரமகேந்திரத்தை நோக்கிப் படையெடுத்து வருவதைக் கூறினார்கள். உடனே சூரன் தன் மைந்தனை பானுகோபனை வரும்படி ஏவலாளர்களை அனுப்பினான்.

பானுகோபன் சூரபன்மனிடம் சென்றான். அவன் மைந்தனைப் பார்த்துச் சிவகுமாரனை வென்று வருதி எனப் பணித்தான். தந்தையர் பணித்தவாறே பானுகோபன் யுத்தத்துக்கு ஆயத்தமானான். பல படைக்கலங்களையும் எடுத்துக் கொண்டு விஜயன், நேமியன், மாயன் முசலி, மூரன், மூர்க்கன் முதலாய அவுணப்படைத்தலைவர்கள் புடைசூழ, இருபதினாயிரம் வெள்ளம் சேனைகள் நெருங்கி வரப் பெரிய தேரில் ஏறிச்சென்றான்.

பானுகோபன் யுத்தத்துக்குக் கிளம்பியதை அறிந்த நாரதமுனிவர் முருகக் கடவுளிடம் சென்று "எம்பெருமானே! பானுகோபன் யுத்தத்துக்கு வருகிறான். அவன் கொடியவன். பெரிய வீரன். இயமனிடம் சூலத்தையும், வருணனிடம் பாசத்தையும் பறித்தவன். ஆதிசேடனிலும் வலிமையுள்

ளவன். தேவரீராலும் சிவபெருமானு லும் அன்றி வேறுயாராலும் எதிர்க்க முடியாதவன்" என்று சொல்லி வணங் கினார்.

பானுகோபன் யுத்தஞ்செய்ய வந் ததை அறிந்த முருகக் கடவுள் புன் முறுவல் செய்தருளி வீரவாகு தேவரை நோக்கியருளினர். வீரவாகு தேவர் இலக்கத்தொன்பதுவீரர்களும் ஆயிரம் வெள்ளம் பூதர்களும் சூழப் பெரிய வில்லை ஏந்திப் பானுகோபன் முன்சென்றார். இருபக்கத்துச் சேனை களும் நெருங்கி மோதிப் பெரும் போரைச் செய்தன. பூதர்கள் திறமை யாகப் போர் புரிந்தார்கள். சிங்கன் என்ற பூதப் படைத்தலைவன் அனலி என்ற அசுரப்படைத் தலைவனைக் கொன்றான். அனலி இறந்ததைக் கண்ட சண்டன் என்ற அவு ணப் படைத்தலைவன் சிங்கனை எதிர்த் தான். சிங்கன் சண்டனையும் கொன் றான். அதன் பின் மாயன் அசமு கன் என்ற அசுரப்படைத்தலைவர் போர்செய்து ஆற்றாது இறந்தார்கள்.

தன்படைத்தலைவர் பலர் மாண்ட தைக் கண்ட பானுகோபன் ஆயிரங் கணைகளை ஏவிப்பல பூதர்களைக் கொன்றான். அதனைக் கண்டு உக்கி ரன் என்ற பூதப்படைத்தலைவன் பானுகோபனை எதிர்த்தான். பானு கோபன் பல பாணங்களை உக்கிரன் மீது விட்டான். உக்கிரன் மீதுபட்ட பாணங்கள் அவரை ஊறு செய்ய வில்லை. அவை நுனி மழுங்கி வீழ்ந் தன. பானுகோபன் கோபித்து எழுப் படையை விட்டான். உக்கிரன் அதனைத் தண்டால் அடித்து முறித் துவிட்டுப் பானுகோபனுடைய குதிரை களைக் கொன்று, அவன் தேரைத் தூக்கி ஆகாயத்தில் வீசினன். பானு கோபன் தேரினின்றும் இறங்கி உக் கிரனைத் தூக்கி எறிந்து சூலத்தால் தாக்கினன். உக்கிரன் மூர்ச்சித்து வீழ்ந்தான். உக்கிரன் வீழ்ந்தபின் தண்டி, பிஙகி, வீரகேசரி, வீரமார்த் தாண்டர், வீராக்கதர், வீராந்தகர், முதலிய வீரர் பானுகோபனை எதிர்த் துப் புறமுதுகுகாட்டி யோடினர். சிலர் மயங்கி வீழ்ந்தனர்; சிலர் தோற்றனர்.

பின்னர் வீரவாகு தேவருக்கும் பானுகோபனுக்கும் பெரிய போர் நிகழ்ந்தது. பலவீரர் மாண்டனர். பானுகோபன் வீரவாகு தேவரின் வில்லை முரித்தான். வீரவாகு தேவர் வேறு வில்லை எடுத்துப் பானுகோபன் வில்லை முரித்து அவன் முடியையும் தள்ளி அவன் கவசத்தையும் உடைத் தார். இவ்வாறு ஒருவரை ஒருவர் ஊறுசெய்த போரில் இருவரும் சில பொழுது மயங்கி நின்றனர்.

வீரவாகு தேவரை வில்லால் வெல்ல முடியாதெனக் கண்ட பானுகோபன் வானவெளியில் நின்று மோகாஸ் திரத்தை விட்டான். அதனல் வீர வாகு தேவரும் ஏனைய வீரரும் சேனை களும் மயங்கினர்கள். இதனை உணர் ந்த முருகக் கடவுள் தாம் இருந்த படியே அமோகப்படையை விடுத்த ருளினர். மயக்கந் தெளிந்து எழுந்த வீரவாகுதேவர் சிவப்படையைக் கை யில் எடுத்தார். அதனைக் கண்ட பானு கோபன் "ஐயோ! வீரவாகுதேவர் சிவப்படையை எடுத்துவிட்டான். அதை மாற்றுவதற்கு என்னிடம்சிவப் படை இங்கேயில்லை. நான் இப்பொ ழுது இங்கே நின்றால் இறப்பது திண் ணம். நான் நகருக்கு மீண்டு தெய்வப் படைகளைக் கொண்டுவந்து இவனை வெல்வேன்" என்று கூறி ஆகாயத் தில் மறைந்து சென்றான். பூதப்படை கள் ஆரவாரித்தன. சூரன் நித்திரை யின்றி வருந்தினன். நாளை நானே போருக்குப் போவேன்" என்று தீர் மானித்தான். (தொடரும்)

# குண்டலினி சக்தி

— மலர் 26, இதழ் 10, பக்கம் 304ன் தொடர்ச்சி.

(2) வஷ்டி அறுவகைச் சுத்திகளில் இரண்டாவதாகும். அஃது இருவகைப்படும். அவை:- நீரின்றிச் செய்வது நீர்கொண்டு செய்வது என்பன. இவற்றுள் நீர்கொண்டு செய்யும் சுத்தியாவது யோகி உத்கத் ஆசனம் இட்டு, நாபிவரை சலத்திலிருந்து குத வழியே சலத்தை உள்ளிழுத்து அஸ்வினி முத்திரையால் வெளியே செலுத்தலாம். யோகி, ஜலத்தில் பட்சிமுத்தாசன மிட்டு நாபிக்குக் கீழுள்ள வயிற்றின் பாகத்தை மெல்ல அசைத்தலால் இதைச் செய்யலாம்.

(3) அறுவகைச் சுத்திகளில் மூன்ருவதான நேதிசுத்தி யென்பது நாசியை நூல்கொண்டு சுத்தி செய்தலாம்.

(4) நாலாவது சுத்தியாகிய லௌலிகி என்பது வயிற்றை இருபக்கங்களுக்கும் உருட்டுதல்.

(5) ஐந்தாவது சுத்தியாகிய திராதக என்பது கண்களிலிருந்து நீர் வரும் வரை குறித்த ஒரு நுண்ணிய பொருளை இமையாது பார்த்தலாம். தாந்திரிக உபாசனைகளிற் கூறப்பட்டுள்ள திவ்விய திருஷ்டி இதன்வழி பெறப்படும்.

(6) ஆருவதாகிய கபாலபாதியென்பது கபத்தை வெளியே தள்ளுவதற்கான ஒரு முறையாம். இது மூவகைப்படும். அவை வாதகிரமம் (உச்சுவாசம் நிச்சுவாசம் செய்தல்) வ்யூட் கிரமம்:- நீரை நாசியால் இழுத்து வாய் வழியாக வெளியேவிடுதல். ஷீவ்யூட் கிரமம் வாயினுல் உறிஞ்சிய ஜலத்தை நாசி வழியாக வெளியேவிடுதல்.

இவைகளே பின்வரும் யோகசாதனைக்குத் தேவையான உடற்சுத்தி முறைகளாம். இதன்பின்னர் வேண்டப்படும் அடுத்தசாதனம் ஆசனமாம். மேற்கூறிய அறுவகைச் சுத்திகளையும் ஒழித்தால் இதுவே ஹடயோகத்திற்கு முதற்படியாம். உடற் சுத்தியின்பின் கையாளப்படும் வழிவகைகளுள் இரண்டாவதாகிய திரிதா (திடம்) என்பது ஆசனத்தினுற் பெறப்படும். யோகாப்பியாசத்தின் பொருட்டு உடம்பைப் பல்வேறு வகையாக நிறுத்தும் நிலையே ஆசனம் எனப்படும். யோகசாதனையின்கண் பலவிதமாக இருக்கும் முறையே சிலர் ஆசனம் என்பர். ஆனுல் ஆசனம் இருக்கும் நிலையை மாத்திரம் குறிக்கவில்லை. ஏனெனில், ஆசனங்களுட் சில குப்புறக்கிடந்தும் நிமிர்ந்து கிடந்தும், கைகளை ஊன்றியும் செய்வனவாகும். உயிர்வேறுபாடுகள் எத்தொகையினவோ ஆசன முறைகளும் அத்தொகையின வென்றும் அத்தொகை 84 லட்சம் என்றும் கூறப்பட்டிருக்கிறது. இவற்றுள் 1600 முறைகள் சிறந்தன வென்றும், அவற்றுள் 32 முறைகள் ஆடவர்கள் உபயோகிக்கத் தக்கனவென்றும் கூறப்பட்டிருக்கிறது. பெரும்பான்மையும் உபயோகிக்கப்படும் ஆசனங்கள் முக்த பத்மாசனம், பக்தபத்மாசனம் என்பனவாம். முக்தபத்மாசனம் வழிபாட்

டுக்குச் சாதாரணமாக உபயோகிக்கப்படுவது. ஆக்ராணத்தையும் (மூக்கு) சட்சுவையும் (கண்) சுரோத்திரத்தையும் (காது) சிங்நுவையும் (நா) கைகளினால் மூடிக்கொண்டும், பாயுருவை (குதம்) வலப்பாதத்தினால் மூடிக்கொண்டும், உபஸ்தத்தை இடப்பாதத்தினால் அமர்த்திக்கொண்டும் இருக்கும் யோனி முத்திரா ஆசனமே குண்டலினி யோகத்தில் பெரும்பாலும் உபயோகிக்கும் ஆசனமாகும். உபஸ்தத்தின் (குறி) வாயிலேயடைப்பதற்கு யோகி உபஸ்தத்தைச் சுருக்கிக் கட்புலனுக்குத் தோற்றுவண்ணம் உள்ளுக்கு இழுக்கின்றான். யோனி முத்திரையையும் கேசரி முத்திரையையும் ஒன்றாக யோகி செய்யுமிடத்துத் தன்னுடைய சிங்நுவை மடித்துக் கண்டத்தை அடைக்கின்றான். (சிங்நுவை மடித்தலே கேசரி முத்திரை).

முண்டாசனம், சித்தாசனம், சவாசனமாகிய பிற ஆசனங்கள் சிறப்பாகத் தந்திரங்களிற் கூறப்பட்டிருக்கின்றன. இவ்வாசனங்களிற் சாதகன் முறையே மண்டையோடுகளின் மேலும் ஈமக்காஷ்டத்தின் மேலும் பிரேதத்தின் மேலுமிருந்து யோகஞ் செய்வான். இச் சாதனைகள் சில கிரியா நோக்கங்களையும் மாந்திரீக நோக்கங்களையும் உடையனவாயிருந்தாலும், அச்சமின்மை, பொருட்படுத்தாமை ஆகிய யோகியின் குணங்களைப் பெறுவதற்குச் சாதகன் கையாளுமுபாயங்களாம். இதுபற்றியே ஏகாந்தமான மலையின் உச்சியையும் மனித சஞ்சாரமற்ற தனிமையான வீட்டையும், ஆற்றங்கரையையும், சுடுகாட்டையும் அக்கிரியைகளுக்கேற்ற விடங்களாகத் தந்திரசாஸ்திரங்கள் விதிக்கின்றன. ஞானக்கினியினால் இச்சைகளாகிய உடல் தகிக்கப்பட்ட இடமே அந்தரங்க சுடுகாடாகும்.

ஆசனங்களைப்பற்றிக் கூறுமிடத்து யோக நூலாசிரியராகிய பதஞ்சலி நுட்பமான விபரங்களை ஒவ்வொரு சாதகனும் தன் தேவைக்கேற்றவாறு கையாளும்படி விடுத்துப் பொதுவான நல்லமுறைகளை மாத்திரம் கூறுகின்றார்.

சிந்தனைகளைத் தெளிவு செய்வதற்கும் ஒன்று சேர்த்தற்கும் ஆசனங்கள் உதவியாகின்றன. எவ்வாசனம் ஒருவனுக்கு அயர்வின்மையையும் சுகத்தையுங் கொடுக்கின்றதோ அதனால் ஒரு ஆசனத்தின் தகுதி தகுதியின்மையை யறியலாகும். இது ஒவ்வொருவரும் தாந்தாமே முடிவு செய்து கொள்ளவேண்டிய விஷயமாகும். சிரமமும் உடம்பில் அசைவும் ஒழியுமிடத்து ஆசனம் பூரணப்படும். மனத்தின் தத்தளிப்புக்குக் காரணமாகிய ரஜோகுணம் அதனால் அடக்கப்படுகின்றது. அவரவருக்கேற்ற ஸ்திரமான ஆசனம் சலனமின்மையை மனத்துக்களிக்கும். ஆனால் ஹடயோகமோ தனித் தனி வெவ்வேறு பலன்களையுடைய பல ஆசனங்களை விதிக்கின்றது. அவ்வாசனங்கள் இருந்து செய்யும் நிலைமைக்கு உரியனவன்றித் தேகப்பயிற்சியைக் கொடுக்கும் நிலைக்கே அதிகம் உரியனவாகின்றன. இப்பயிற்சிகளுட் சில இருந்து கொண்டு செய்யப்படுகின்றன. மற்றவை நின்றுகொண்டும் குனிந்துநின்றும், கிடந்து கொண்டும், தலை நிலத்திலே பொருந்த நின்று

கொண்டும், செய்யப்படுகின்றன. ஈற்றிற் கூறப்பட்டதே விருட்சாசனமாகும். கால்கள் வளையாதபடி குனிந்து நின்று கைகளாற் பாதங்களைத் தொடுதலே சக்கராசனமாகும். உடலுங் கால்களும் "ட" வடிவம்பொருந்த நிற்றலே வாம தக்ஷிணபாதாசனமாகும். இவ்வப்பியாசங்கள் தேகத்துக்கு உறுதியையும் நோயின்மையையுந் தரும். இவையுடலின் வெவ்வேறு அங்கங்களைப் பிராணவாயு அவற்றோடு சம்பந்தப்படக் கூடிய நிலைகளில் வைக்கின்றன. அவை பிராணுயாமத்திற்கு உதவியா யிருக்கின்றன வென்றும், குண்டலினி சக்தியை யெழுப்புவது உட்பட அதன் இலக்கை (நோக்கத்தை) அடைதற்கும் உதவியாயிருக்கின்றனவென்றுஞ் சொல்லப்படுகின்றது. நியமங்களுள் அஹிம்சையும், இயமங்களுள் மிதாகாரமும் தலை சிறந்திருக்குமாறு போல, ஆசனங்களுட் சித்தாசனமே சிறந்ததென்று மேலெடுத்துக்காட்டிய நூலினசிரியர் கூறுகின்ருர். இவ்வாசனம் நன்கு கைவரப் பெற்றால் உக்மநி அவஸ்தை கைகூடும். மூவிதபந்தங்களும் கஷ்டமின்றிச் சித்தியாகும்.

முத்திராப்பியாசத்தினல் ஸ்திரம் உண்டாகின்றது. ஹடயோகத்திற் கூறப்படும் முத்திரைகள் யோகாசனத்தில் உடலின் அவயவங்கள் அமைந்திருக்கும் நிலைகளைக் குறிக்குமென்க. ஜாலந்தர முத்திரை போன்ற முத்திரைகள் உடலுக்கு அப்பியாசத்தைத் தருவனவாயும், ஆரோக்கியத்தைத் தருவனவாயும் நோயையும் சாக்காட்டையும் தவிர்க்கும் ஆற்றல் உடையனவாயும் இருக்கின்றன. நெருப்பினுலும், நீரினுலும், வாயுவினுலும் தாக்கப்படாமல் அவை யுடலைக் காக்கின்றன. தேகாப்பியாசமும் அதனுற் பெறப்படும் ஆரோக்கியமும் மனத்தைச் சீர்ப்படுத்துகின்றன. இவ்வாருகச் சீர்ப்படுத்தப்பட்ட உடலினதும் மனத்தினதும் சேர்க்கையால் உண்டாகும் முத்திரைகளாற் சித்தி கைகூடுகின்றது. குண்டலி சக்தியை அடைத்திருக்கும் வாயிலைத் திறப்பதற்கு முத்திரைகள் திறவுகோல்கள் போன்றன. சாதகன் குறித்த ஒரு யோக முறைக்கு எல்லா முத்திரைகளையும் உபயோகிக்கவேண்டியதில்லை. தனது நோக்கத்தை யடைவதற்கு எவையெவை தேவையோ அவற்றைச் சாதனை செய்யக் கடவன் என்பது எமது துணிபு. ஒருமுறைக்குத் தேவையான முத்திரைகள் பிறிதொரு முறைக்கு அத்தியாவசியமானவையல்ல. கேரானந்த சங்கிதை யென்னுநூல் பல முத்திரைகளுண்டென்றும் அவற்றுள் குண்டலியோகத்திற்குப் பத்தே முக்கியமானவை யென்றும் ஆசனங்களுட் சித்தாசனஞ் சிறந்திருப்பதுபோல முத்திரைகளுட் கேசரி முத்திரையே சிறந்த தென்றுங் கூறுகின்றது. சித்தாசனங் கட்டியிருக்கும் யோகி, யோனிமுத்திரையில் காதுகள், கண்கள், நாசித்துவாரங்கள், வாய் ஆகிய இவற்றைக் கைவிரல்களால் அடைத்து வெளிவிடய நுகர்ச்சியைத் தவிர்க்கின்ருன். மேலும் ஜீவ ஸ்தானத்திலிருக்கும் பாயுருவை ஒரு குதியினுலும் உபஸ்தத்தை மற்றக் குதியினுலும் அடைத்துக்கொண்டு உபஸ்தத்தை உள்ளுக்கு இழுக்கின்ருன். அதன்பின் காகினி முத்திரை வாயிலாகப் பிராணவா

யுவை உள்ளுக்கு இழுத்து அபான வாயுவுடன் சம்பந்தப்படுத்துகிறான்.

ஆறு ஆதாரங்களையும் முறையே தியானஞ் செய்து ஹம் ஹம்ஸ என்னும் மந்திர செபத்தினால் தூங்கிக் கிடக்கும் குண்டலினியை எழுப்புகின்றான். யோகி சூரியனைக் குறிக்கும் ஹம் என்னும் பீஜசெபத்தினால் உண்டாகும் குண்டலினி சக்தியைப் பாதிக்கும்படி செலுத்துகின்றான். 'ஸ' என்னும் பீஜம் இச்சையைத் தொழிற் படுத்துகின்றது. மூலாதாரத்திலிருக்கும் பிராணவாயு சோமசூரிய வடிவாயிருக்கின்றது. ஹம்ஸ என்னும் மந்திர ஜெபம் குண்டலினி சக்தியை எழுப்புகின்றது. ஹம் அதனை விழிக்கச்செய்ய 'ஸ' அதனை மேலெழச் செய்கின்றது. யோகி, அதனைப் பின் சகஸ்ராரத்தை அடையச் செய்கின்றான். குண்டலினிசக்தி நிரம்பப்பெற்றவனும் ஆனந்த சிவசங்கமம் அடைந்தவனாகவுங் கருதி அப்பெற்றியினால் தன்னை ஆனந்த சொரூபமான பிரமமெனப் பாவித்துத் தியானஞ் செய்கின்றான். சுத்திசெய்யும் வண்ணம் பாயுருவைப் பல்காலும் விரியவும் ஒடுங்கவும் செய்தலும் அல்லது அபான வாயுவை யடக்கும் வண்ணம் பாயுருவை யொடுக்குதலும் அசுவினி முத்திரையென்க. பிராணவாயுவைச் சுழுமுனையிற் பொருந்தும்படி செய்வதற்குச் சக்தி சாலன முத்திரையில் அசுவினி முத்திரையில் இரண்டாவது முறை பலகாலுஞ் சாதிக்கப்படுகின்றது. வயிற்றின் நசைக் கூட்டத்தை வலமிடமாகவும் இடம்வலமாகவும் வட்டப்பட உருட்டுதலே சக்திசாலன முத்திரையாகும். குண்டலி சக்தியை எழுப்புவதே அதன் நோக்கமாகும். சக்தி சாலன முத்திரை செய்யும் பொழுது சாதகன் சித்தாசனம் கட்டி பிராண வாயுவைப் பூரித்து அதனை யபான வாயுவுடன் சம்பந்தப்படுத்துகிறான்.

யோனி முத்திரை செய்யும்பொழுது சக்திசாலன முத்திரையும் சாதிக்கப்படுகின்றது. சக்தி சாலன முத்திரையை நன்றாகப் பயின்றபின்னரே யோனி முத்திரை சாதிக்கப்படல் வேண்டும். பிராணவாயு சுழுமுனையைப் பொருந்தும்வரை அசுவினி முத்திரையால் உபஸ்த தசைக் கூட்டம் சுருக்கப்படுகின்றது. இந்நிகழ்ச்சி சுழுமுனையிலுண்டாகும் நாதன ஒலியாலறியப்படும். கும்பகஞ் செய்த பின்னர் 'ஹம்' 'ஹம்ஸ' என்னும் மந்திர ஜெபத்தினால் குண்டலினி மேலெழுந்து சகஸ்ராரத்தையடைகின்றது.

யோகி அப்போது குண்டலினி சக்தியால் விழுங்கப் பெற்றவனாகவும் ஆனந்த சிவசங்கமம் அடைந்தவனாகவும் தன்னைப் பாவனை செய்யவேண்டும். பின்னர் யோகி "நானே ஆனந்தம்", "நானே பிரமம்" எனத் தியானஞ் செய்கின்றான். மகாமுத்திரா, மகாவேதா என்னும் இரு முத்திரைகளும் முன்னரே கூறப்பட்ட மகா பந்த முத்திரையுடன் சாதிக்கப்படும் மகாமுத்திரையில் யோகி, யோனியை இடக் குதியாலமர்த்திக் கொண்டு வலக்காலை நீட்டி இருபாதங்களையும் கைளினாற் பிடிக்கின்றான். இதன் பின் ஜாலந்தர பந்தம் சாதிக்கப்படுகின்றது. குண்டலினியெழும்பிய பின் பிராணன் சுழுமுனையைவிட்டு நீங்கினதும் அவை செயலற்றுப் போகின்றன. இரேசகஞ் சிறிது சிறிதாகச் செய்யப்படல்

வேண்டும். இம்முத்திரையை உடலின் வலதுபுறத்திலும் இடது புறத்திலும் சமமுறையாகச் செய்யப்படல் வேண்டும். இம்முத்திரை ஏனைய ஹடயோக முத்திரையைப் போல நோயையும், சாக்காட்டையும் தவிர்க்கத் தக்கதென்று கூறப்பட்டிருக்கின்றது. மகாவேத முத்திரையில் யோகிமகாபந்த ஆசனங்கட்டியிருந்து, மேலே சொன்ன முறைகளால் மனத்தை ஒருமைப்படுத்திப் பிராணவாயுவின் உச்சுவாச நிச்சுவாசங்களை நிறுத்துகின்றான். பின்பு தன்னிரு உள்ளங்கைகளையும் நிலத்திலூன்றிக்கொண்டு, சகனத்தால் நிலத்தைத் தட்டுகின்றான். பிராணன் சுழுமுனையுட் புகுந்ததும் சோம, சூரிய அக்கினிகளாகிய இடை, பிங்கலை, சுழுமுனை என்னும் மூன்று நாடிகளும் ஒன்றாகின்றன.

இந் நிலையில் உடல் இறந்தது போன்றதாகி, அத்தன்மை நிச்சுவாசம் மெதுவாக வுண்டாக நீங்குகின்றது.

குண்டலினி சக்தியை எழுப்பும் இன்னொரு முறைப்படி யோகி வச்சிராசனங்கட்டி கால்களைக் கணைகளுக்கு மேற்புறம் கைகளாற்பற்றி மாறி மாறிப் பாதங்களால் சகனத்தைத் தட்டுகின்றான். யோகி இச்சாதனை செய்யும் பொழுது பஸ்த்ர கும்பகஞ் செய்து வயிற்றை ஒடுக்குதலுஞ் செய்கின்றான். இந்நான் மூலத்திற் கூறப்படும் கேசரி முத்திரையையும், யோனி முத்திரையையுஞ் செய்வதற்கு ஆரம்பத்தில் நா புருவ மத்திவரையும், நீட்டப்படுகின்றது. பின்னர், அதனை மடித்துக் கண்டத்துட் சொருகுவதனால் முன்னரே உள்ளிழுக்கப்பட்ட சுவாசம் வெளிச் செல்லாதபடி தடுக்கப்படுகின்றது. இவற்றிற் சித்தியெய்தி, ஊர்த்துவ நோக்காக்கப்பெற்ற குண்டலினி, உலகம் முழுவதையுந் தன் வயப்படுத்தும்வரை, மனம் ஆஞ்ஞா சக்கரத்திற் பதிக்கப்படுகின்றது. இந்நிலையில், பிரபஞ்சம் யோகியின் சரீரத்தில் ஆத்மாவினின்றும் வேறல்லாததாகக் காணப்படுகின்றது. சிலவேளைகளில் நாவின் கீழுள்ள தசை வெட்டப்படுகின்றதென்றும் சொல்லப்படுகின்றது. இவ்வாறு செய்வதால் கையின் உதவியின்றி நா நீட்டவும் இழுக்கவும் முடியாத நிலைமை யேற்படுகின்றது. ஆனல் வேறுசிலர் இவ்வாறு வெட்டாமலே, இம் முத்திரையைச் செய்து முடிக்கின்றனர். சித்தாசனத்திலிருந்து சாம்பவி முத்திரையைச் செய்யும்போதே, மனம் விருத்திகளிலிருந்து விடுபடுகின்றது. (தொடரும்)

---

இடைபிங் கலைஎன்னும்
இருவாசல் அடைத்துவிட்டுக்
கடையிற் சுழுமுனையைக் கபாலம் திறந்துகொண்டு—தங்கமே
காசி தேசம் போவோம் வாராய்.

நாசி நுனியிலே
நாட்டத்தை வைத்துவிட்டு
வாசிக் குதிரையேறித்—தங்கமே
மாறிமாறிச் சிமிட்டாக்கொடு.

—நற்சிந்தனை

# கதிர்காம மூர்த்தி

முன்னர்க்காலத்து வாயுவினாலே பறித்து எறியப்பட்ட கொடுமுடி மூன்றனுளொன்றாய, தக்கிணகயிலை, பொன்னகரம், ஈழம் முதலிய பற்பல பெயர்களையுடைத்தாய், சூரபன்மன், இராவணன், குபேரன், மது, உக்கிர வழுதி, விபீடணன், தொண்டைமானி ளந்திரையன், நல்லியக்கோடன், குளக்கோடன், உக்கிரசோழன், வால சிங்கன், சிங்கையாரியன், அரசகேசரி, பரராசசேகரன், செகராசசேகரன் முதலிய பலப்பல அரசராலாளப்பட் டதாய், சிவாகமம், புராணம், மிருதி, தமிழ்வேதத் திருவருட்பா, இதிகாசம் முதலிய நூல்களினுஞ் சங்க நூல்களி னும் ஆங்காங்கே புகழப்பட்டதாகி, விராட்புருடனுக்கு இடை நாடியாய் திரிகூடம், கேதீச்சரம், கந்தமாதனம், ஏமகூடம், நீலம், சுவேலம், சிவனொளி பாதம், செங்கடகம், வள்ளி, காள பைரவம், நகுலம், மேந்தலை, மகானு வரம், சிவர்த்தனம், உகந்தை, கதிரை முதலிய மலைகளையும் மாவலிகங்கை, கருடகங்கை, காவிரிகங்கை, மாணிக்க கங்கை, பாலாவி, பாவநாசம், நவ கங்கை, மாயவனாறு, கழுநீர்க்கங்கை, வேலாயுதபுட்கரணி, கன்னியாகங்கை, நகுலம், சமுத்திரதீர்த்தம், பாதலக கங்கை, கல்லாறு, நவகிரி, திருவடிநிலை, யமுனாரி, நிலாவரி, வாமனம் முதலிய தீர்த்தங்களையுமுடையதாய் விளங்கு வது இலங்கைமண்டலமேயாம்.

இத்தகைய இலங்கை சூரபன்மன் றன் மகேந்திரபுரிக்கு வடக்கேயுள் ளது. எவ்வாறெனிற்கூறுவதும், இந்து சமுத்திரமெனவிப்போது வழங்கப் படும் மகேந்திரக்கடலின் நடுவே எண் பதினாயிரம் யோசனையகலமும் நூறு யோசனை விஸ்தீரணமுமுடையதோர் நகரைச் செய்வித்து அதன் எட்டுத் திக்குகளினும் ஏமபுரம், தேவபுரம், இலங்காபுரம், நீலபுரம், சுவேதபுரம், முதலிய எட்டு நகரங்களையும் புரி வித்து அவற்றிற்கு கசானனன் (யானை முகன்) துரங்காசியன் (குதிரை முகன்) யாளிவத்திரன் (யாளி முகன்) பல்லூக வத்திரன் (கரடி முகன்) வியாக்கிரா னன் (புலி முகன்) வராகதுண்டன் (பன்றி முகன்) சிங்கவத்திரன் (சிங்க முகன்) கவயாசியன் (காட்டுப்பசு முகன்) என்னும் வீரர்களைக் காவல் வைத்தானென்று கந்தபுராணங் கூறக்காண்க.

இங்ஙனம் வீரமகேந்திர புரிக்கு வடக்கு வாயிலிலுள்ளதாகி விளங்கும் இலங்கையின் தென்கோடியிலே விளங்குவது கதிரை என்னும் கதிர் காமத்தலமேயாம். இத்தலமகாத்மியங் கள் யாவும் அவனருள் பெற்ற ஆன் றோர் எடுத்துரைப்பதன்றிப்புழுத்த நாயினுங்கடையேனாகிய யானெடுத் துரைக்கப்புகுதனகையென்பது சத் தியம். ஆயினும் என்மனத்தவா வென் வயப்படா தியன்றவாறுரைத்தி யென்று பிடர்பிடித்துந்தலானெழுந் தனன். இத்தலத்தின் மகிமைகளை யெல்லாம் கந்தபுராணம் மகேந்திர

யுத்த காண்டங்களினும் பிரமாண்ட புராணம் தலமகாத்மியத்துங் கூறப் பட்டன அன்றி, விசேடமாக மற்ச புராணம், தக்கிண கைலாச மான்மியத் திலே அம்சுகாமாசல மான்மியத்திலு மகலமா யறையப்பட்டுள்ளன. ஸ்ரீமத் அருணகிரிநாதசுவாமிகள் கிளியுரு வெடுத்துப் பல தலங்கள் தோறும் தரி சித்துப் போந்தருளிய காலை இத்தலத் தும் உபயகதிர்காமத்தும் எழுந்தரு ளித் திருப்புகழ் பாடித் தோத்திரம் புரிந்தருள் பெற்றூர்.

"கிளிப்பாடு பூதியில் வருவோனே" என வித்தலத் திருப்புகழ் கூறியரு ளிய தனுலும் பெறுதும். அதுபற்றி வன்னிமங்கலம் என்னுஞ் சிறப்புப் பெயருள்ளது.

திருப்படை வீட்டுத்தலங்களாகிய திருப்பரங் குன்ற முதலிய ஆறுதார தலங்களினும் மேலாய துவாதசாந்தத் தலமாய் விளங்குவது அன்றியும், சிவ தலங்களிலே கோயில் என்னும் சிதம் பரம் ஆகாயலிங்க முடைத்தாம் இர கசியத் தலமானது போல இஃது மங்ஙனே சோதிவடிவரா யெவரானும் விரும்பத் தகுந்த பரவியோமமூர்த்தி, எவர்களானுங் காண்டற்கு அரியராய் விளங்கலினிரகசியத் தலமாய் விளங் கும். அஃதிற்றை ஞான்றும் பிரத்தி யக்ஷமாகக் காணலாம். ஆதலின் உல கின் கண்ணுள்ள தலங்கள் எல்லாவற் றினும் மேலாய திது. இங்ஙனுள்ள தீர்த்தங்களோ மாணிக்ககங்கை முத லாக அளவற்றன. மலைகளோ கதி ரைமலை, வள்ளிமலை, தெய்வயானைமலை, காளபைரவமலை முதலாகவெண்ணிலா தன. மூர்த்திகளோ சுப்பிரமணிய சிவகணேச உமா வீரபைரவ மகா சாத்த நவலக்கவீர புட்கலோ ராம காளி யசுராரி துர்க்க முதலிய பலப் பலருளர். அவர்களெல்லாஞ் சுப்பிர மணியக்கடவுளை யுபாசித்து நாற்புறங் களிலும் வசித்துளார்.

இத்தலத்திற்குத் தக்கிண கந்தபுரி, ஏமகூடம் அம்சுகாமம், கதிரை, கதிர் காமம், பூலோககந்தபுரி, கோட்டம், வன்னி மங்கலம், காரிகாப்பு, வரபுரி, பஞ்சமூர்த்தி வாசல், சகல தேவா பாஷியம். கதிர்கேணி, சகலசித்தி ரம், அகத்தியப்பிரியம், சிதாகாசம், குகத்தலம், தகராலயம், பிரமசித்து, மகத்து விவிக்தும், ககனம், பரிசுத் தம், அற்புதம், பாசறை, அம்பலம், பாலியோமம், இரண்யகோசம், அந்த ராகாசம், அவ்வியத்த மூர்த்தபுரி, முதலிய பல திருநாமங்களை யுடையது. இங்கே குமாரக்கடவுள் கணப்போ தும் நீங்கா திருந்து (இச்சாசத்தி கிரி யா சத்திகளாகிய) வள்ளியம்மையார், தெய்வயானை அம்மையாருடன் அமர்ந்து பற்பல திவ்வியாற்புதத் திரு விளையாடல்களைச் செய்தருளுவார். தேவர் முதலிய கணர்கள் இப்போ தும் பூசை செய்வது அன்பர்க்குத் தெரிய வருகின்றது.

முன்னே சூரபன்மன் இதற்கருகி லுள்ள தன் மகேந்திரபுரியில் தேவர் களையுஞ் சயந்தனையுஞ் சிறையிட, அதனை மீட்டற்காக எழுந்தருளிய சுப்பிரமணியக் கடவுள், திருக்கைலை யினின்றும், இலக்கத் தொன்பது வீரர்களும் இரண்டாயிரம் பூதவெள் ளங்களுந் தம்மைச் சூழப்புறப்பட்டுத் தாரகற் கொன்று திருச்செந்தில் அமர்ந்து, சூரபன்மன் முதலாயினோர் தம் வரலாறுகளையெலாம் வாக்குத்

தலைவனான தேவ குருவாம் வியாழனிடங் கேட்பார் போலக் கேட்டருளிக் கடல் வழியாகப் போந்து அதனைக் கடந்து இலங்கை மலையைத் தாண்டி தென் கோடியை அடுத்த காலை பிரமவிட்டுணு வந்து பணிந்து பரம்பொருளே! இதோ சூரபன்மனிடம் மகேந்திரம். ஆண்டசுர நீசர்கள் செறிதலால் தேவரீர் பேசுதல் தகுதியன்று என்ன, கதிரைவேற் கடவுளும். தெய்வக் கம்மியனான விசுவகருமனைத் திருநோக்கஞ் செய்தருளி ஓர் நகரமைத்தி விரைவினென்றனர். அவனும் பலப் பல மண்டபங்களோடு கூடியதும், உன்னத கோபுரங்களால் விளங்கப் பெற்றதும் நடுவணே ஸ்ரீகந்தக்கடவுளின் திருக்கோயிலானலங்கரிக்கப் பெற்றதும், பலப்பல வீதிகள் செறியப்பட்டதும், மாற்றுயர்ந்த ஏமத்தால் (தங்கத்தினால்) அமைக்கப்பட்டதுமான ஏககூடமென்னும் ஓர் நகரஞ்செய்தனன். அதன்கண் பெருமானார் எழுந்தருளியிருந்து போர் புரிந்து அவுணர்களைத் தொலைத்துத் தேவர்களைச் சிறைமீட்டு, மகேந்திரபுரியை வருணராசற்குக் கொடுத்தருளி வடகோடிக்கட்பருதி புரத்துள்ள (ஆம்பரத்துறை) உத்தரகதிர்காமம், உபயகதிர்காமம் எனப்படும் புதுச்சந்நிதியில் தங்கி வீற்றிருந்து பின் தம்மகேந்திரமலையைக் கடந்து இலங்கை மலைகளையுங், கடலினையுந் தாண்டித்திருச்சீரலைவாய்சென்றருளினரென்றது. ஆகலின் பாசறை கதிர்காமமே. அது வடமொழிக் கந்தபுராணம் வீரமா மகேந்திரகாண்டம் ஏழாவது அத்தியாயம் 21 வது சுலோக முதல் 48 வது சுலோகம்வரையும் உரைக்கப்பட்டவாற்றானும் தமிழ்க் கந்தபுராணத்து,

### கந்தபுராணம் ஏமகூடப்படலம்

இவ்வகை அயில்வே லண்ணலீராயிரம் பூதவெள்ளங்
கவ்வை யினமைந்து செல்லக்கலைகடல் வரைப்பினேகி
யெவ்வம தடைந்த தொல்லையிலங்கையங் குவடுநீங்கி
மைவரை புரைசூர் மேவுமகேந்திரபுரமுன் போந்தான்

காண்டியீது சூரனார் நடுங்கணீசர் செறிதலா
லாண்டு சேறன் முறையதன் றதற்கடுத்த வெல்லையா
மீண்டு பாசறைத்தலமியற்றுவித்திருந்தபின்
வேண்டுமாறு புரிதியைய வினையநாடி யென்னவே.

கலங்கல் கொண்டிடு மகேந்திரவரைப்பினைக் கடந்தேபின்
இலங்கைமா நகரொருவியே யளக்கரை யிகந்தேகி
நலங்கொள் சீருடைச் செந்தியிற்றொல்லை மாநகரெய்தி
யலங்கலஞ்சுடர் மஞ்ஞையின் றிழிந்தனனயில் வேலோன்.

எனவருஉஞ் செயுட்களால் அறியப்படும். இத்தலத்தே ஏமகூடம் என்னுந் திருக்கோயிலினிடத்தே ஆறு திருமுகங்களும் குண்டலநிரைகளும், அழகிய கடப்பமாலையணிந்த திருமார்பும், வலத்திருக்கரங்களிலே கொடி, வச்சிரம், அங்குசம், அம்பு, வேல், அபயம் என்பவும் இடத்திருக்கரங்களிலே தாமரை, கண்டாமணி, மழு, தண்டு, வில், வரதம் என்பவும் அமைந்த பன்னிருதிருப்புயங்களும் கொண்டு, கோடி சூரியப்பிரகாசம் போன்ற திருமேனியுடையராய், வேகமூர்த்தியாய், நவவீரர்களும், இலக்கங்கணாதிபர்களும், இரண்டாயிரம் பூதவெள்ளங்களும், தேவர், முனிவர், கின்னரர், முதலாய பதினெண் கணத்தவர்களும் போற்றி வணங்கி

யேவல்புரிய வீற்றிருந்தருளினர். அத் திருக்கோலத்தை மானுடராகிய சிறியேம் தரிசித்தலியலாதென்றே மூலத் தானமடைக்கப்பட்டு மூர்த்தியும் அவ்வியத்தமாயினர். கந்தசுவாமி இத் தலத்தை விரும்பியுறைகின்றார் என்பது,

"கதிரை நச்சினானுங் கலசனுமாம் வேத
மதுரை நச்சினார்க் கினியன் வந்து"

என்ற தொல்காப்பியவுரைச் சிறப்புப் பாயிரத்தானுணர்க. கதிர்காமமென்பது, கதிர் = ஒளி, காமம் = இன்பம் எனப்பொருள்படவே ஆன்மாக்களுக்குச் சிவஞானவொளியினாற் பேரின்பத்தை அளிப்பது எனவும், பரஞ்சுடராகிய கந்தக்கடவுள் விரும்பி உறைவது எனவும் சொல்வர். அன்றித் துரியப்பொருளாகிய குக ஞானமென்னும் இன்பத்தைக் கொடுத்தலானும் வந்தகாரணப் பெயரென்னலுமாம். அது,

### கதிர்காமத் திருப்புகழ்

துரிய மேலற்புத பரமஞானத்தனிச்
சுடர்வியாபித்த நற்பதிநீடு
துகளில் சாயுச்சியக் கதிரையீறற்சொற்
சுகசொரூபத்தை யுற்றடைவேனே.

என அருணகிரிநாதசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளியதனானும் பெறுதும். கதிர் - சூரியசந்திரர்களால், காமம் = விரும்பிப் பூசிக்கப்பட்டது எனவுங் கூறுப. இதன் விரிவெல்லாங் கதிர்காம மான்மியத்துட் கூறியுள்ளோம்.

ஆண்டுக்காண்க. கதிர்காமம் என்னுஞ் சொல்லே கதிரை என மரூஉவிற்று. இம்மூர்த்தியின் பெருமையைச், சுப்பிரமணிய தலக்கோவைப் பிள்ளைத்தமிழ்ச் செய்யுளானும் அறிக. அதுவருமாறு:-

மாணிக்க நிறைகங்கை யாடியுன்னைப்பணிய
வந்திடும் பூதலத்தோர்
வாயூமர் பாடவுங் குருடர் கண்பார்த்திடவு
மலடிகள் பின்மைந்தர் பெறவுங்
காணிற்குமாரவேலா வென்னுமன்பரைக்
கரடிபுலி யானைசிங்கம்
நாலிற் பணிந்தஞ்சி யோடவுங் கந்தனே
கண்கண்ட தெய்வமெனவே
யாணிப்பொன் முத்திமண்டப மேவிகச்சியினு
னடியேனை யாண்டுகொண்டெ
னுகத்தில் வந்தபிணி தீர்த்திடவு முன்னிற்கு
மாறுமுக மெய்த் தெய்வமே
சேணிற் புலோமசை வளர்த்த பெண்
பிடிகணவ
செங் கீரை யாடி யருளே
தேவரொடு மனிதர்பணி கதிர்காம வேலனே
செங்கீரை யாடியருளே.

இக்கடவுள் அருணகிரிநாதரது திருப்புகழ், பொய்யாமொழிப்புலவனார் கோவை, கதிர்காமக் கலம்பகம் என்னுமிவையிற்றை யேற்றருளிய சரிதங்களும் பிறவும் விரியுமாகலின் விடுத்தாம். இங்ஙனம் ஏமகூடம் என்னுங் கதிர்காமத்தலத்திற் சோதிவடிவராய் வீற்றிருந்து போகபேரின்பங்களை அருளலாற் கதிர்காம மூர்த்தியெனப் பெயர்பெற்றார்.

கதிர்காமமூர்த்தயே நம!

---

கருத்தி லிருக்கும் கதிர்காமத் தோனை
வருத்தமுற் றேன்தேடு கின்றாய் — திருத்தியுன்
சித்தமிசை நித்தம் திகழொளியைக் கண்டுருகி
முத்தனென வாழ முயல்

—நற்சிந்தனை பக்கம் 191

# சிவதொண்டன்

சுபகிருது ௵ ஐப்பசி ௴
(ஒக்ரோபர் — நவம்பர் 1962)


## யாத்திரை வழிபாடும் பாத தரிசனமும்

ஒரு வீட்டில் ஒருவனுக்கு நோய் உண்டாகின்றது. அதனை அவ்வீட்டிலுள்ளவர் அறிவரேயன்றி, அந்த நோயைப் புறத்தே - தூரத்தே - உள்ளவர்கள் அறிவாரோ? அறியமாட்டார், தீர்க்கமாட்டார். அதேபோலத்தான் ஆன்மாக்களாகிய எம்மிலுள்ள மலமாகிய நோயை எம்மோடு கலந்து நிற்கும் அருள் அறிவதன்றி வேறொன்றும் அறியமாட்டாது. தீர்க்கமாட்டாது என்னும் பேருண்மையை உமாபதி சிவாசாரியார்

*"அகத்துறு நோய்க்கு உள்ளினரன்றிச்*
*சகத்தவரும் அறிவாரோ தான்"*

என்னும் குறளில் அருளுருநிலை என்னும் அதிகாரத்தில் அழகாகக் கூறியருளுவாராயினர். அதற்கு முந்திய அருளது நிலை என்னும் அதிகாரத்தில் முதலாம் குறளிலேயே அருளின் பெருமையைக் குறிப்பிடுவாராயினர்.

உலகத்திலே எது பெரியது? என்ற கேள்வி எழுமாயின், அதற்கு விடை கூறுகின்றார் உமாபதிசிவம். ஒவ்வொருவர்க்கு ஒவ்வொரு காலத்து ஒவ்வொன்று பெரியது. எதாவது ஒரு பொருளை விரும்புகின்றோம். அப்போது அதனினும் மேலான பொருள் வேறு இல்லை என்று எமக்குத் தோன்றுகின்றது. அப்பொழுது அப்பொருளினும் மேலாக வேறொரு பொருள் இல்லாததுபோலவே, **எக்காலத்தும் எல்லார்க்கும்** அருளினும் மேலாக விரும்பத்தக்க பொருள் வேறு இல்லை என்று அப்பெரியார் ஆணித்தரமாகக் கூறுவாராயினர்.

*"அருளிற் பெரியது அகிலத்து வேண்டும்*
*பொருளிற் றலையிலது போல்"*

என்பது அவர் குறள். அத்தகைய திருவருளின்வழி நின்றொழுகுதற்கு ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொரு வழியை அத்திருவருளே அருளும் என்பது அறியத்தக்கது. நாம் நடத்தும் யாத்திரை வழிபாடும் அத்திருவருள் நடத்த நடந்துவரும் அழகை என்னென்பேம்! அறிந்தோ அறியாமலோ நாம் யாத்திரை செய்துகொண்டிருக்கிறோம் என்பதை நூல்கள் எமக்கு ஞாபகப்படுத்துகின்றன. ஆயின், அதை அறிந்து செய்யும்போது அந்த யாத்திரையின் பெருமையையுணர்ந்து பேணிக் கொள்கிறோம். அன்றொரு நாள், மாணிக்கவாசக சுவாமிகள் யாத்திரைப்பத்தின்கண்ணே பேசும் அக யாத்திரையைப் பற்றி - ஞான யாத்திரையைப்பற்றிச் சிந்தித்தோம். இன்று மற்றொரு பெரியாரின் புற யாத்திரையும் அக யாத்திரையும் ஆகிய இரண்டையும் பற்றிச் சிந்தித்தல் பொருத்தமுடையதாகும். "Walking is the king of Exercises" (நடத்தல் அப்பியாசங்களுள் அரசன் போன்றது.) என்று ஆங்கிலேயர் கூறுவர். இஃது உடற் பயிற்சியைப் பொறுத்தவரையில் மட்டுமே அவர்கள் கூறினார்கள் என்று எண்ணக்கிடந்தாலும் சோசர் (Chaucer) என்னும் பழம்புலவர் எழுதிய காண்டர்பரிக் கதைகள் (Canterbury Tales), ஜோன் பணியன் (John Bunyan) என்பார் எழுதிய யாத்திரிகர் முன்னேற்றம் (Pilgrim's Progress) போன்ற நூல்களைப் படிக்கும் போது, ஆத்மீக அப்பியாசத்துக்கும் இது பெரிதும் உதவுவது என்று அவர்கள் ஓரளவுக்குக் கருதினார்கள் எனக் கொள்ளக்கிடக்கின்றது. ஆயின், நம் பெருமக்களோ பண்டுதொட்டே இந்த யாத்திரையை அக முன்னேற்றத்துக்கு - ஆத்மீக வளர்ச்சிக்கு - உளத் தூய்மைக்கு - அன்புப் பெருக்குக்கு - அருட்

# நற்சிந்தனை

## வேண்டும் - வேண்டாம்

நாங்கள் சிவமென்று எண்ண வேண்டும்
தூங்காமல் தூங்கிச் சுகிக்க வேண்டும்
ஆங்காரந் தன்னை அகற்ற வேண்டும்
நீங்காத நிட்டையில் நிலைக்க வேண்டும்
மாங்காய்ப்பா லுண்டு மகிழ வேண்டும்
தேங்காமல் தேங்கி இருத்தல் வேண்டும்
ஏங்காமல் வையத்தி லிருக்க வேண்டும்
உல்லாச மாக உலாவல் வேண்டும்
எல்லா ரிடத்தும் அன்பு வேண்டும்
மேலோரைக் கண்டால் வணங்க வேண்டும்
பொல்லாப் பில்லையெனச் சொல்ல வேண்டும்
வல்லமை பேசி மகிழ வேண்டும்
அல்லாகூ என்ற ரற்ற வேண்டும்
சில்லாலைப் பாட்டுப் பாட வேண்டும்
தில்லாலைக் கள்ளுக் குடிக்க வேண்டும்
கல்லாலே கன்னல் உண்ணல் வேண்டும்
மல்லாகத் தானை மதிக்க வேண்டும்
தன்னைத் தன்னு லறிய வேண்டும்
முன்னை வினையைக் களைய வேண்டும்
சென்னைப் பட்டினம் செல்ல வேண்டும்
அன்னை போல அன்பு வேண்டும்
பொன்னை மாதரைப் போக்க வேண்டும்
பின்னைப் பிறவியை நீக்க வேண்டும்

சாங்காலம் வந்தால் திகைக்க வேண்டாம்
வாங்காமல் வாசியில் தூங்க வேண்டாம்
பாங்காக வாழ விரும்ப வேண்டாம்
வேங்கைப் புலிவந்தால் ஓட வேண்டாம்
ஆங்கென்றும் ஈங்கென்றும் அலைய வேண்டாம்
போங்காலம் வந்தால் புலம்ப வேண்டாம்

பேற்றுக்கு ஏதுவாகக் கருதி அதை ஒரு சாதனமாகக் கொண்டார்கள் என்று காண்கின்றோம். நால்வர் பெருமக்களும் பிறரும் இத்தகைய பாதயாத்திரையை மேற்கொண்டு ஒழுகினார்கள் என்று கண்டோம். ஏன்? எங்கள் குருபரனும் அவர்தம் குருநாதனும் இந்தப் பாதயாத்திரையை நடத்திய முறையை அறிவார் அறிவார். பாதம் நிலத்திலே களைக்கும் வரையும் நடக்க நடக்க, உள்ளம் இறைவனிலே பதியப் பதிய, வழிபாடு நிகழ்ந்தது. பிறர்க்கு என்ன நடக்கின்றது என்பது தெரியாமலே இந்த வழிபாடு நிகழ்ந்தது என்று காண்கிறோம். நல்லூரிலேயிருந்து வண்ணைக்கும், வண்ணையிலிருந்து கொழும்புத்துறைக்கும், கொழும்புத்துறையிலிருந்து மாவிட்டபுரத்துக்கும், ஏன்? யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காமத்துக்கும் இப்படிப் பாத யாத்திரை நடந்த வரலாறுகளைக் கேட்கும் போது மயிர்ப்புளகம் உண்டாகின்றது. இதுவும் வெயிலிலும் மழையிலும் பாதரட்சைகளே அணிந்தறியாத ஒரு பெரியார் நடந்து நடந்துசென்றருளினர். இப்போதும் அத்திருப்பாதம் ஓய்ந்திருக்கின்றதென்று நினைக்கின்றீர்கள்? இல்லை. அன்பர் பாதங்களால், நாமுய்ய நடக்கின்றது.

இனி, நம் நால்வர் பெருமக்கள் அனைவருமே ஓரோவழிப் பாதயாத்திரை நிகழ்த்தினார்கள் என்று கண்டோம். ஆயினும், திருஞானசம்பந்த சுவாமிகளுடைய யாத்திரை தந்தையார் தோள் மூலமும் முத்துப்பல்லக்கு மூலமுமே பெரும்பாலும் நடந்தது. சுந்தர மூர்த்தி சுவாமிகளும் குதிரையேறிச் சென்ற வரலாறுகளும் பிறவும் இடையிடையே கேட்கின்றோம். மாணிக்கவாசக சுவாமிகளும் மந்திரிக்குரிய பல்லக்கு முதலியவற்றிற் சென்ற வரலாறு பேசப்படுகின்றது. ஆயின், அப்பர் சுவாமிகளோ முழுவதும் பாத யாத்திரையாகவே தமது யாத்திரையை நிகழ்த்தியதாகத் தெரிகிறது. அவர்தம் பாதயாத்திரையும் பாத தரிசனமும் அவர்தம் கைலாய யாத்திரையின்கண்ணே காணப்படும். "கெடுக சிந்தை கடிதிவர் துணிவே" என்று சொல்லக்கூடியதாக அமைந்திருக்கின்றது அவர் தம் யாத்திரை வழிபாடு. எம் அப்பர் தமிழ் நாட்டிலுள்ள சிறந்த தலங்கடோறும் சென்று சென்று வணங்கினார்கள். திருவொற்றியூர், திருப்பாசூர், திருவாலங்காடு என்னும் திருப்பதிகளை வணங்கிக்கொண்டு திருக்காளத்திக்கு வந்தருளினார்கள். அது நக்கீரர் கயிலை பாதி காளத்திபாதி பாடிய தலம் என்பதை நாமறிவோம். அந்த மலை தென்கயிலாய மாதலின் அஃது அப்பர் சுவாமிகளுக்குத் திருக்கயிலைமலையை நினைவூட்டிற்று. கைலை நாதனைக்காண யாத்திரையிற் புறப்பட்டார். **"அங்கண் மாமலைமேல் மருந்தை வணங்கி யாரருளால் மிக்க பொங்கு காதலின் உத்தர திசை மேல் விருப்பொடு போதுவார்" ஆகிப்** பல நாடுகளையும் காடுகளையும் கடந்து திருப்பருப்பதம் (ஸ்ரீபர்வதம்) அடைந்தார். பருப்பதத்திலிருந்து புறப்பட்டவர் பல அடியார்கள் புடைசூழத் தெலுங்கு நாட்டைக் கடந்து, மாளவ தேசத்தைக் கடந்து, இலாடதேசம் வழிச்சென்று மத்திம பைதிரத்தின் (Central Provinces) மூலம் வாரணாசியை (Benares - காசியை) அடைந்தார். இங்கு தம்மைப் பின் தொடர்ந்து வந்த அடியார்களையும் நிறுத்திவிட்டு, அதன் மேல் தனியாகவே கற்சுரம் அடைந்து தம் பாத யாத்திரையை நிகழ்த்தினார் என்று தொண்டர் சீர்பரவுந் தனிச் சிறப்புவாய்ந்த சேக்கிழார் சுவாமிகள் கூறுகின்றார்கள். இத்தகைய பெரியோர்கள் வரலாற்றைச் சொல்லுவது, சேக்கிழார்க்கெளிதலது தேவர்க்கும் அரிது என்றார்கள் பின்வந்த பெரியோர்கள். இதன்பின், அப்பர் சுவாமிகள் நிகழ்த்திய யாத்திரைப் பகுதி எவர் மனசையும் உருக்குந்தகையதாம். இரவு பகலாகத் தனி நடந்த நாவுக்கரசு சுவாமிகள் கால் தேயக், கை சிதைய, மார்பு நைய, என்புமுரிய, ஊன் கெடப், பழுவம் புரண்டு புரண்டு சென்று அங்கம் எங்கும் அரைந்திடப் புறத்து உறுப்பழிந்தபின் அகத்து முயற்சியுந் தப்புறச் செயலற்று அந்நெறியில் தங்கினார் என்று சேக்கிழார் சுவாமிகள் கூறுவதைக் கேளுங்கள்!

1. இங்ங னம்மிர வும்ப கற்பொழு தும்மருஞ் [சுர மெய்துவார்
பங்க யம்புரை தாள்ப ரட்டளவும்ப [சைத்தசை தேயவும்
மங்கை பங்கர்தம் வெள்ளி மால்வரை [வைத்தசிந்தை மறப்பரோ
தங்க ரங்க ளிரண்டு மேகொடு தாவி [ஏகுதல் மேயினார்.

கைகளும் மணிக்கட்டுவரை தேய்ந்துவிட மார்பினாலுந்திச் செல்வாராயினார். பின்னர்,

2. மார்ப முந்தசை நைந்துசிந்தி வரிந்த [வென்பு முரிந்திட
நேர்வ ருங்குறி நின்ற சிந்தையில் [நேசம் ஈசனை நேடும்நீடு
ஆர்வ மங்குயிர் கொண்டு கைக்கும் உடம் [படங்கவும் ஊன்கெடச்
சேர்வ ரும்பழு வம்பு ரண்டு புரண்டு [சென்றனர் செம்மையோர்.

3. அப்பு றம்புரள் கின்ற நீளிடை யங்க [மெங்கு மரைந்திடச்
செப்ப ருங்கயி லைச்சி லம்படி சிந்தை [சென்றுறு மாதலால்
மெய்ப்பு றத்தி லுறுப்ப ழிந்தபின் [மெல்ல வுந்து முயற்சியும்
தப்புறச் செயலின்றி யந்நெறி தங்கினார் [தமிழாளியார்.

இவ்வாறு செயலற்றுச் சுவாமிகள் அங்கு தங்கியபோது, பன்னகம்புரி பரமர் ஒரு முனிவராம்படி தோன்றி மொழி வேந்தரின் குறிப்பைக்கேட்டு "மானுடப் பான்மையோர் அடைவதற்கு எளிதோ கயிலைமால்வரை? மீள்வதே உமக்குக் கடன்" என்றார். "ஆளும் நாயகன் இருக்கை கண்டல்லால் மாளும் இவ்வுடல்கொண்டு மீளேன்" என்றார் மீளா ஆளாய அப்பர். மாதவர் விசும்பிற் கரந்தார். "ஓங்கும் நாவினுக்கு அரசனே! எழுந்திரு" என்றார். சொல் தவறாத அரசர் எழுந்து ஒளி திகழ்வாராய், அண்ணலே! அமுதே! திருக்கயிலையில் இருந்த நின்கோலத்தை நான் தொழ அருள்புரி என்றார். "அம்முறை திருவையாற்றிற் காண்" என்றார் இறைவர். அப்பர் திருப்பாடல் பல பாடித் திருவைந்தெழுத்தோதி முழுகினார் அங்கிருந்த திருக்குளத்தில். திருவையாற்றுத் திருக்குளத்தில் தோன்றி வந்தெழுந்தார் சொல்லரசர். இரு கண்ணீரிலும் குளித்தார். குளித்தபடி,

1. மிடையும் நீள்கொடி வீதிகள் விளங்கிய [ஐயா
றுடைய நாயகன் சேவடி பணியவந் [துறுவார்
அடைய வப்பதி நிற்பனவும் சரிப்பனவு [மான
புடைய மர்ந்ததம் துணையொடும் பொலி [வன கண்டார்
பொன்மலைக்கொடி யுடனமர் வெள்ளியம் [பொருப்பின்
தன்மை யாம்படி சத்தியுஞ் சிவமுமாஞ் [சரிதைப்
பன்மை யோனிகளி யாவையும் பயில் [வன பணிந்தே
மன்னு மாதவர் தம்பிரான் கோயிலின் [முன் வந்தார்.

என்று கூறுகின்றது பெரியபுராணம். இதில் **வந்து** என்ற ஒரு சொல்லாலே, வடகயிலை மலைச் சாரற்பொய்கையுள் மூழ்கியவர் தென்றிசை ஐயாற்று வாவியின் கரையில் வந்த அந்த நீளமாகிய அளவுக்குறிப்பையும் அடக்கி ஒரு மொழியாற் சேக்கிழார் சுவாமிகள் சுட்டிய சிறப்புக் காண்க. இதில் ஒன்று ஏறிச் செல்லும் நிலையும் மற்றொன்று இறங்கிவரும் நிலையுமாம். ஒன்று நடந்து நிலத்தின்வழி திகழ்ந்தது. மற்றொன்று நீரின்வழிச் சார்ந்தது. ஒன்று வெளிமுகமாகவும் மற்றொன்று உள்முகமாகவும் கூடிற்று. இரண்டும் திருவருள் வழியே நிகழ்ந்தன. ஆயினும், மீண்டுவந்த இச்செயல் இறைவர் அருள்மொழியாற் பணித்த அவ்வழியே நின்று தமது ஆன்மபோத முயற்சி என்பது சிறிதுமின்றி நிகழ்ந்த செயலால், அதிசூக்குமத் தன்மையில் உளதாயிற்று என்றெல்லாஞ் சுட்ட **வந்து** என்று ஒரு மொழியாலே ஆசிரியர் சேக்கிழார் **நுட்பமாகச் சொல்லுவாராயினர்.** இஃதெவ்வாறு கூடிற்று என்ற ஆராய்ச்சியில் மக்களின் மனம் துணிதலாகாது என்பது அவர் கருத்து. "ஆட்பாலவர்க் கருளும் வண்ணமும் ஆதி மாண்பும் கேட்பான் புகில் அளவில்லை. கிளக்க வேண்டா" என்றல்லவோ ஞானசம்பந்தர் பாடினார்? "நாதன் மாட்சிமை கேட்க நவிலுங்கால் ஓது மெல்லை யுலப்பில வாகலின், யாதும் ஆராய்ச்சி இல்லையாம்" என்று

சேக்கிழாரும் கூறுவாராயினர். இதுபற்றியே முதற் பாட்டிலே "திருவருட் பெருமை யாரறிவார்" என்றும் கேட்டருளினர். இதுவே சைவசித்தாந்தத்தின் ஆணித்தரமான உயர்நிலையாகும்.

இந்த ஒப்பற்ற யாத்திரையின் பலனுக அப்பர் சுவாமிகளுக்கு அகத்தே பெரிய மாற்றம் ஏற்பட்டது. யாத்திரையின் பலனைக் கையோடு கண்டருளினர். முன்பு "கண்டறியாதன கண்டேன்" என்று வாய்விண்டு அவர் சொல்லியருளுகின்ருர். பீடலிங்கத்தின் இயல்பைச் சிவஞானசித்தியார் பின்வருமாறு கூறுகின்றது.

"சத்தியுஞ் சிவமு மாய தன்மையிவ் வுலக [மெல்லாம்
ஒத்தொவ்வா ஆணும்பெண்ணும் உயர்குண [குணியு மாகி
வைத்தனன் அவளால் வந்த ஆக்கம்இவ் [வாழ்க்கை யெல்லாம்
இத்தையும் அறியார் பீட லிங்கத்தின் [இயல்பும் ஓரார்',

சத்திசிவம் என இரு தன்மையாயிருத்தலாலன்றே உலகம் முழுவதும் ஆண் பெண் என இரு வகையாயும் குணகுணிப் பொருள்களாயும் விளங்க வைத்தனன். இங்கே சொல்லிய வாழ்வுகளெல்லாம் சிவசத்தியால் வந்தனவேயாம். சிவமும் சத்தியும் கொண்டருளிய பீடலிங்க வடிவமே அவ்வாறு இருவகையுமாய் இருப்பதென்பதற்குக் கண்கூடான சாட்சியாம். என்னுந்திரண்ட பொருளைத்தரும் இச்செய்யுளுக்கு இலக்கியமாக விளங்குவது கயிலாயக் காட்சியாகும். அப்பர் பெருமானுக்கு இக்காட்சி கிடைத்தது. அவர் கண்டறியாதன கண்டார். நிற்பனவும் சரிப்பனவும் துணையொடும் பொலியக் கண்டார். அவற்றுள் சத்தியும் சிவமுமாம் சரிதையைப் பணிந்தார். தேவர் முதல் யாவருஞ்சூழ மலைமகளுடன் வீற்றிருந்த வள்ளலாரைக் கண்டார் வாகீசர். கண்ட ஆனந்தக் கடலைக் கண்களால் முகந்து கொண்டார். உருகினர். ஆடினர். பாடினர். அழுதார். அவர்க்கு அங்கு நிகழ்ந்தவற்றைச் சொல்ல வல்லவர் யார்? வாய் குழறினர். தேவாரத் தீந்தமிழ்ப் பனுவல்கள் பல பாடினர். அவற்றுள் ஒன்று 'மாதர்ப் பிறைக் கண்ணியானை' என்று தொடங்கும் கீழ்க்காணும் திருப்பதிகமாகும்.

"மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் [மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர் [பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்ற [போது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன [கண்டேன்
கண்டே னவர்திருப் பாதம் கண்டறி யாதன [கண்டேன்".

மாதர்ப்பிறை - அழகுடைய பிறை. முழுமுதல் திருமுடிமேல் வாழ்வு பெற்றமையாலும், வளர்தலும் தேய்தலுமாகிய நிலையினின்று நீங்கினமையாலும், பாம்புக்கு அஞ்சாமையாலும் அழகுபெற்ற பிறை என்பார் **மாதர்ப் பிறை** என்ருர். இந்த அழகிய பிறையைக் கண்ணியாக (தலை மாலையாக) உடைய சிவபிரானை மலைமகளோடும் பாடி, பூவும் நீரும் சுமந்துபோகின்ற அடியார்களின்பின் புகுவேனுகிய யான், (முன்பு வழி நடந்தபோது அடைந்த கால் தேய்ந்தமை, கை சிதைந்தமை, மார்பு நைந்தமை, என்பு முரிந்தமை, ஊன் கெட்டமை ஆகிய) எவ்வித சுவடும் இல்லாமல் திருவையாற்றினை அடைந்தபோது, அங்கு காதலோடு கூடிய இளம் பெண்யானைகளோடு ஆண் யானைகள் வருவதைக் கண்டேன். அவை சத்தியுஞ் சிவமுமாக அமைவதைக் கண்டதால், **திருப்பாதம்** சிவானந்தம் ஆகிய முன் கண்டறியாதவற்றைக் கண்டேன். (ஊனக்கண்ணினுல்) கண்டு அறியாதனவற்றை (திருவருள் காட்ட)க் கண்டேன் என்னும் பொருள்பொதிந்த இத்திருப்பாடலில் "கண்டே னவர் திருப்பாதம்" என்றே அப்பர் சுவமிகள் தம் யாத்திரையின் பலனைக் குறிப்பிடுதல் காண்க. கைலை யாத்திரைக்கும் திருவடிக்குமிடையேயுள்ள தொடர்பை இவ் வரலாற்றிலிருந்து காண்கின்ரேம். "யானெனதென்றற்ற இடமே திருவடியாம்" என்ருர் குமரகுருபர சுவாமிகள். இத்திருப்பதிகத்தின் ஒவ்வொரு செய்யுளின் ஈற்றிலும் "கண்டேனவர் **திருப்பாதம்** கண்டறியாதன கண்டேன்" என்று அப்பர் சுவாமிகள் ஆராமையோடு கூறியருளும் அழகு காண்க.

எனவே, அப்பர் காட்டும் வழியிலேயே எம் யாத்திரை வழிபாடும் நடைபெறுகின்றது. எம் கொழும்புத்துறை அப்பர் காட்டும் வழியும் இதுவேயாம். இந்த யாத்திரை வழிபாடு எமக்கெல்லாம் சிறந்த பலன்தந்து சிறக்குமாக.

The Sivathondan

## NATCHINTHANAI

(Page 379, 2nd Edition)

**Shiva Bhakti**

Shiva Bhakti alone can fill a man with bliss. Everything else is futile. Incessantly meditate on Shiva. Fear nothing. The victory is your very own. No matter, how often you fail, be not discouraged. Failure belongs to the flesh (matter). You are "Chit" (Knowledge - Wisdom). You will never die. Arise, awake and till you are victorious, stop not on the way. Full of spirit, go forward. Behold all the powers obeying you. Waste not your time in vain debates and disputes. Wherever you go, the Lord will go with you there.

Put on no show. Become strong within yourself. Religion is the state of being one's pure self without any forms and formalities. Dedicate your body, wealth and self to the Lord. Thereafter give up all your attachments. Realize He is everything.

# Saiva Siddhanta

*(continued from last issue)*

These acts symbolise the burning up of the mala or impurity of the soul (pasu) in the fire of divine knowledge. The tripundara suggests that the impurities (malas) to be removed from the soul are three, namely, anava mala, karma mala and maya mala. Whiteness is suggestive of purity and jnana. Hence the goal suggested for human life is the removal of all impurities covering the soul and the attainment of jnana. Similarly, the rudraksha beads suggest that their wearer should have compassion for those in sorrow and suffering, bearing in mind that the scriptural account of the rudraksha tree is that it was created by the will of Lord Siva from the drops of the tears He shed on hearing from the devas the details of the suffering and shame inflicted on them by the asuras.

The Siva Linga, the squatting Nandi (Bull) facing the Linga, the Bali pita behind the Nandi, and the Flag staff usually found in all Siva temples are also symbols of great ideas. The Siva Linga stands for the flame-like jivathma in the lotus of the human heart[1]. There are eight forms in which Siva can be worshipped i. e. the 5 elements, the Sun, the moon, and one's own soul. The highest of these forms is the jivatma since it alone is chit. And worshipping in one's own heart and not in an external object, is of the highest order. The squatting Nandi represents the purified jiva which has discarded all sense of I and mine, and has willingly surrendered itself—body, mind, soul—to the Lord, and thus remains in union with the Supreme Being[2]. The Bali pita stands for the pasa or bond of ignorance and evil which binds all souls and which are sacrified and left behind by the soul which has attained jnana. The flag staff at the top of which a flag with the figures of a bull is hoisted at the time of the annual Brahmotsavam (great festival) suggests that the Lord lifts up the pasu (soul) from the earth to the highest state — Siva Loka or jnana. It

1. This is known as Atma Nivedana.
2. Because of this surrender, the Bali does not stand erect, but lies down seeing only the Lord with whom it is in a state of at-one-ment.

suggests further that a worshipper would fix his mind only on the Lord when he enters the temple for worship, and stand unperturbed like the dvaja stambha.

The temple also has much symbolic significance. It represents the human body and some of its important parts. The outer walls — one, three or five — represent one, three or five kosas or bodies enveloping the soul. The *sanctum sanctorum* stands for the heart. Here the symbolic nature of the great temple at Chidambaram may be noted. Its walls — prakaras — represent the bodies encasing souls. The Kanaka Sabha where Siva as Lord Nataraja dances represents the heart of the Viratpurusha. There is no direct entrance from the front to the sabha; there are but two side-entrances, one from the right and the other from the left. These two entrances represent the main artery and the vein of the human heart. There are five steps leading up to the Sabha where the glorious figure of Lord Nataraja stands. These steps represent the sacred *Panchaksharas — Na ma si va ya*, and are known as the Panchakshara steps. In the thin wall in front of the Sabha there are 96 holes representing the 96 tatwas through which the soul peeps, in its *sakala avastha*, and which it leaves behind when it enters, the suddha avastha. There are in the Sabha clusters of pillars numbering 4, 6, 18, and 28. These stand for the Vedas, Vedangas, Puranas and the Sivagamas, respectively. In the ceiling there are 64 rafters representing the 64 kalas (arts and sciences). In the roof there are 21,600 golden tiles representing the total number of our daily svasas (breaths), and 72,000 nails driven into these tiles to suggest the number of nadis in the human body. There are nine golden kalasas on the roof to represent the nine sakthis through which the Lord acts. Within the Hall, there are five *Pitams* to represent the Trimurthis, Maheswara and Sadasiva. To the north of the inner shrine there is a thousand pillared mantapam, and there is also a tank called *Sivaganga*. The Mantapam with its 1000 pillars represents the *Sashasrara* of the human brain the thousand petalled lotus seen by the Yogi in the region of his brain. And the Sivaganga or Amrita Pushkarani suggests the amrita or nectar-juice which exudes from the region of the *Vena Cava* in the brain. It may be noticed also that there is a vacant portion which is marked off from the major portion of Kanaka Sabha. That is known as *Chidambara Rahasya*. There is no image installed in it. It is meant to suggest the arupa (formless) and

athitha (transcendental) aspect of the supreme. In the main portion of the Sabha there is a Silver case with a crystal Siva Linga. It represents the *Rupa-arupa* form of the Lord. Right behind it, stand the superb figure of Lord Sri Nataraja, and the gracious form of His Consort, Sivakami, on His left. Thus are the *Athitha, Ruparupa*, and *Rupa* Forms of the Supreme Being represented in the Kanaka Sabha.

Unless the Supreme One out of Its infinite Mercy descends from Its incomprehensible and unapproachable state to come within the reach of the earnest, but imperfect, mortals, there is no possibility of their ever becoming one with Him. "It is clear," says St. John of the Cross, that God in order to set a soul in movement, and raise it from one extreme, the abject condition of the creature, to the opposite extreme, that is to the infinite height of the divine union, must act gradually, gently, and in accordance with the nature of the soul. Now the Ordinary mode of knowledge proper to the soul requires the use of the forms and images of created things; for we can know and savour nothing without the stimulation of the senses. Hence God, to raise the soul to supreme knowledge and do it with gentleness must begin to touch her in her lowest extremity, that of the senses, in order to raise her gradually and in accordance with her proper nature to her other extremity — that spiritual wisdom which is independent of the senses. God works man's perfection according to man's nature. He begins with that which is lowest and most external and ends with that which is highest and most interior.[1]

The jivan-mukta who is a jnani sees all this and sees far more in the Siva chinna, the *Siva Alaya*, and the Sivalinga than those who are treading the paths of charya, kriya, and yoga. The jnanis see in the Siva Linga, not any finite object, but only the Omnipresent Lord, and to them the Lord manifests Himself directly, with love like that of a cow for its calf. Thus they too worship in the temple along with others in the three lower stages, though with a different attitude and result. Those who have passed on to higher stages can and do worship as in the lower stages. By offering worship in temples they induce others to congregate in such holy places to do service and worship, and thus gain spiritual benefits.

1. Quoted by Evelyn Udderhill in "The Golden Sequence" — PP. 32 33.

Only one other feature of the life of jivan-muktha will be noticed before closing this lecture. It is his great love for all forms of life—his *jiva karunya.* He sees the Lord present in all of them, and therefore, he loves them. He is moved deeply by the sight of his fellow-men distracted and tossed about by their deceitful senses, and moved to do service to them, in some suitable form. St. Ramalinga Swami[2] declares that *Karuna* (compassion) and (Sivam) are the highest objects to be achieved, and explains both most elaborately in his entrancing verses and his prose writings. He brushes aside all beliefs, acharas and social arrangements which do not promote the realisation of these two supreme objectives. Also in an oftrepeated prayer of his, he puts karuna first and prays to the Universal Father that he might be enabled to love all living beings.

Another seer states that there are only three things to be done by all men. These are speaking nothing but *satya* (truth), doing hitha (good) daily to living beings around us, and constantly thinking of *Sivam.* Thus he has given directions as to how we should use our speech, body, and mind — our trikaranas. He adds that these three injunctions are those found in the Vedas and the Agamas revealed by God, and that these are acceptable to the followers of all religions and all persons. May the Lord who is both immanent and transcendant guide us and help us to lead such a pure life, and reach at no distant time the state of a jnani who is dear to him.

Om Shanti: Shanti: Shanti:

— *Sri S. Satchidananthan Pillai*

" Whatever is old does not *ipso facto* become good; Nor will any book written today become bad because it is new. The wise ones who evalute Truth will not reject a precious gem simply because it happens to be covered with dust, but will appreciate its worth. The mediocres will content themselves by recognising in the new book the beauties of the old ones. Those who are incapable of judging the merits and demerits of a book after careful study will praise it or condemn it, according as it is praised or condemned by a large number of Scholars. They have no opinion of their own.

— *Sivaprakasam*

2. One of the most powerful living forces in Tamil Nad. He was born in 1823 and lived for about 50 years. He has composed thousands of heart-melting songs widely read and enjoyed.

# YAJNA

True action is not separable from true love and true wisdom. The religion of Shruti (the Vedas or Vedanta) makes every act, feeling and thought of our life a Yajna, an offering to the Devas.

Deva in the Vedantic language means the power giving life and light to different faculties and the deva or devata of a faculty, indriya or sense taken c o s m i c a l l y (Adhyatmik and Adhidaivik). The devata of chakshu (or sight) is the sight of all beings called Aditya and only symbolized by the material Sun or the world's eye. The devata of feet is the power in all feet styled Vishnu, and so on. Thus true Yajna or sacrifice to the devas means offering or dedicating one's own individual faculties and senses to the corresponding cosmic powers. Offering to Indra would mean realizing the presence of God in all eyes; honouring and respecting all eyes; offending no eyes by unworthy condnct; presenting smiles, blessings, love and kindness to whatsoever eyes may turn upon you; and offering your eyes to the All-Sight with such a devotion that the egoistic claim being entirely given up, the All-Light himself may shine through your eyes. Sacrifice to Brihaspati is dedicating my intellect (thoughts) to all the intellects in the land or thinking for the good of the land as if myself were none else than my countrymen, merging my interests in the interests of the people and exulting in their joy.

In short, Yajna implies realizing in active practice 'my neighbour to be my own self, feeling myself as one or identical with all,' 'losing my little self to become the Self of all.' This is crucifixion of the selfishness, and resurrection of the All Self. One aspect of it is usually styled bhakti and the other is called Jnana.

O All, (Om!)
Take my life and let it be
Humbly offered, All, to Thee.
Take my hands and let them be
Working, serving Thee, yea Thee.
Take my heart and let it be
Full saturated, Lord, with Thee.
Take my eyes and let them be
Intoxicated, God, with Thee.
Take this mind and let it be
All day long a shrine for Thee.

This dedication being thoroughly accomplished, one realizes the blissful significance of Tat-tvam-asi (That-thou-art).

*(Swami Rama Tirtha)*

# RIGHT THINKING

Everything in our life is the result of thought, either conscious or subconscious. If our thoughts are good then our outward life would be orderly. harmonious and perfect. Disorders of life are due to evil thoughts.

It is natural for life to be harmonious and beautiful. We do not have to create these states by huge effort; they are the natural order of things, which will manifest as soon as we cease to distort life. We can distort a tennis ball by squeezing it but as soon as we let it go, it flies back to its original shape because it is its natural shape. It is the same with life, as soon as we leave off distorting it, it manifests its inherent order, beauty aud perfection.

There is the eternal, unchanging Reality which is the substratum of everything. While in the external world of the senses we see many imperfections, yet interiorly there is always an unknown order and harmony. When a storm rages over an ocean, huge waves are formed on the surface. A few yards lower down the sea it is quite calm and undisturbed. It is the same with life. If we dive deep we can see an inner calm and a perfect order and harmony.

Sages have always spoken of an interior World of Reality. And they have emphasized that the centre of Harmony is within us. The Innermost Centre in us all where Truth abides in fullness is the One which has no second to it.

There are things so precious that no wealth can buy. No wealth can buy happiness, peace, love etc. They come as a result of right thinking.

People make their life difficult for themselves through ignorance of the laws which govern their being, through a wrong use of their imagination, through wrong thinking and wrong emotions, through wrong desires, and through focussing their powers and attentions upon wrong objects. Harmony is brought into our life in place of discord when it is lived according to the laws of being, and when our thoughts and emotions are brought under control and the attention fixed upon a worthy goal.

All this may seem to be too difficult to many but really it is not so. There is the influence of the Infinite Power and an Infinite Intelligence. Not even a blade of grass does move without the will of this Infinite Power.

The average man cuts himself off from his source and is like a battery that is almost run down. He does his work with difficulty and at the end of the day he is fatigued.

One who knows the Truth, and lives it, is like a battery that is recharged daily. He does his work without effort, and at the end of the day is not fatigued. Also he receives ideas into his consciousness which if followed, may greatly improve his prospects.

In addition to all this, his life becomes daily more harmonious and splendid; Instead of being buffeted about by life from pillar to post he remains in a state of calm and perfection.

# சிவதொண்டன்

— செந்தமிழ் ஆங்கிலத் திங்கள் வெளியீடு —

"எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவா னீசன்"

மலர் - 26. சுபகிருது ௵ ஐப்பசி ௴ ( ஒக்டோபர் — நவம்பர் 1962 ) இதழ் - 11

## பொருளடக்கம்

| | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | நற்சிந்தனை | .... | 329 |
| 2. | தாயுமான சுவாமிகள் | ... | 330 |
| 3. | சண்முகவிஜயம் | ... | 338 |
| 4. | குண்டலினிசக்தி | ... | 340 |
| 5. | கதிர்காமமூர்த்தி | ... | 345 |
| 6. | யாத்திரை வழிபாடும் பாததரிசனமும் (Editorial) | ... | 349 |
| 7. | நற்சிந்தனை | ... | 350 |
| 8 | Natchinthanai | .... | 354 |
| 9. | Saiva Siddhanta | .... | 355 |
| 10. | Yajna | ... | 359 |
| 11. | Right Thinking | .... | 360 |

Bilingual Monthly Registered at the G. P. O. as a Newspaper

உ
சிவமயம்

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!

# நற்சிந்தனை

(இரண்டாம் பதிப்பு)

முதல் வெளியீட்டிலுள்ள எல்லாப்பாடல்களும்,
அதற்குப்பின் சிவதொண்டனில் வெளிவந்த பாடல்களும்,
இன்னும் முன் அச்சில் வெளிவராத பாடல்களும்
சேர்த் தொன்ருகத் திரட்டி வெளியிடப்பட்ட
சிறந்த திருந்திய பதிப்பாகும்.

சிவதொண்டன் அன்பர் யாவரினதும் கையில்
இருக்கவேண்டிய பிரதியாகும் பக்கம். 382

விலை ரூபா 7-50 தபாற்செலவு வேறு

## சிவநெறிச் சிந்தனைத் திரட்டு

விலை ரூபா 1-00 தபாற்செலவு வேறு

### தியானகாலம்

விலை சதம் 50 தபாற்செலவு வேறு

இவை இரண்டு நூல்களும் மிகக்குறைந்த விலையில் மலிவுப் பதிப்பாக வெளியிடப் பட்டிருக்கின்றன. கைவசம் உள்ள பிரதிகள் மிகச்சிலவேயாம். ஆதலால், விரும்புவோர் வாங்குதற்கு முந்திக் கொள்ளுதல் வேண்டும்.

ஆங்கில வெளியீடு

Saiva Siddhandha 1-00.

பெறும் இடங்கள்: யாழ்ப்பாணத்தில் 1 சிவதொண்டன் நிலையம்,
,, 2 ஸ்ரீ லங்கா புத்தகசாலை.
கோழும்பில் T. மயில்வாகனம்
Accountant Income Tax Department
மட்டக்களப்பு S. மயில்வாகனம் [Govt. Central College

Hon. Editor; K. K. Natarajan, B. O. L. Dip-in-Ed. Printed and Published By V. Thillayampalam, J. P. Sankarathai, Vaddukkoddai at the Sri Lanka Printing Works Jaffna for the Board of Management Sivathondan Society, Sivathondan Home 434, 439 K. K. S. Road, Jaffna [Ceylon.]